பக்கங்கள் : 20+XIV=34

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 17 வெள்ளிக்கிழமை (02.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :280

# ஒரு லட்சம் மக்கள் திரண்டு நேற்று கிளிநொச்சியில் உரிமைப் பிரகடனம்

## சுயநிர்ணயத்துக்கான தமிழர் போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரிக்கவும் வலியுறுத்து



கிளிநொச்சி,செப்ரெம்பர் 2

**"தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும், ஏற்றுக்கொண்டு மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி உரிமை என்பவற்றின் அடிப்படையில் ஈழத் தமிழர்களையும், அவர்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்."**

**நேற்று கிளிநொச்சி நகரின் மத்தியில் கூடிய ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சர்வதேச சமூகத்திடம் இவ்வாறு வலியுறுத்தினர். தமிழ்த் தேசிய எழுச்சியை முன்னிறுத்திப் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.**

கிளிநொச்சியிலிருந்தும், ஏனைய மாவட்டங்களில் இருந்தும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த எழுச்சி நிகழ்வுக்காக நகரில் திரண்டிருந்தனர். மைதானம் நிரம்பி வழிந்து வீதிகளிலும் பொதுமக்கள் குவிந்திருந்தனர். இதனால், ஏ9 வீதியூடான போக்குவரத்து கிளிநொச்சியில் நேற்றுப் பகல் முதல் தடைப்பட்டிருந்தது.'

மாலை 5 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச் சுடர் ஏற்றல், ஈகச் சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல் ஆகிய ஆரம்ப நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின. கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் தி.பிரபாகரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாநாட்டின் இறுதி நிகழ்வாக இரவு 7.30 மணியளவில் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

கடந்த ஜூலை 27ஆம் திகதி வெளியிடப்பட்ட வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி தமிழர் தாயகப் பிரதேசங்கள் எங்கும் நடைபெற்றுவரும் எழுச்சிப் பிரகடன மாநாடுகளின் வரிசையில் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் விருப்பப்படி தீர்க்கமான முடிவை புலிகள் இயக்கம் விரைவில் எடுக்கும்!

## எழுச்சிப் பிரகடன மாநாட்டில் தங்கன் அறிவிப்பு



கிளிநொச்சி,செப்.2

தமிழீழ மக்கள் அனைவரும் பேரெழுச்சி கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். எனவே, இந்த மக்களின் எழுச்சி மிக்க உணர்வுகளுக்கு மதிப்பளித்து தீர்க்கமான முடிவுகளை விடுதலைப் புலிகள் அமைப்பு விரைவில் எடுக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்.

நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

நிம்மதியாக கௌரவமாக வாழ்வதற்கான உத்தரவாதத்தை வழங்குமாறும் இல்லையேல் அதை நாமே எமது பாதையில் தொடர்ந்து சென்று பெறுவதற்கு வழிவிடுமாறும் தமது அதியுயர் எழுச்சி மூலம் அனைத்து தமிழீழ மக்களும் அறைகூவி நிற்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் எழுச்சி நிகழ்வு எமது வரலாற்றின் முக்கியத்துவமான பதிவை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தான் தமிழ் மக்கள் எல்லோரும் தேசியரீதியாக பரிபூரணமாக கிளர்ந்துள்ளார்கள். எமது விடுதலைப் போராட்டப் பாதையை நாம் பின்நோக்கிப் பார்ப்போமானால் இவ்வாறான மக்கள் எழுச்சிகள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடியும்.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனம் எமது போராட்டத்திற்குப் பாரிய உந்து சக்தியாக அமைந்தது.

1987 ஆம் ஆண்டும் அப்போதைய இந்திய அரசினால் அனுப்பப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகளின் பிடியில் எமது தேசிய விடுதலைப் போராட்டம் சிக்கித் தவித்தபோது அதிலிருந்து விடுபட எமது அமைப்பும் அனைத்து தமிழீழ மக்களும் சாத்வீக வழியில் போராடினோம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் கந்தன் இன்று காலை தேரில் எழுந்தருளி வருகிறார்

யாழ்ப்பாணம்,செப்.2

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ரதோற்சவம் இன்று காலை நடைபெறுகின்றது.

விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து காலை 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை இடம்பெறும். காலை 7.30 மணிக்கு முருகப் பெருமான் தேரில் எழுந்தருளுவார்.

கந்தப் பெருமானின் தேர்த்திருவிழாவினைக்காண பல லட்சக்கணக்கான அடியார்கள் இன்று ஆலயத்தில் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் இருந்தும் இம்முறை பெரும் எண்ணிக்கையான அடியார்

(20ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் பேச்சு நடத்த அரசு திட்டவட்டமாக மறுப்பு!

கொழும்பு,செப்.2

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளை கிளிநொச்சியில் நடத்தலாம் என விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனையினை அரசாங்கம் நேற்று உத்தியோகபூர்வமாக நிராகரித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. உயர் அதிகாரி இன்று வருகிறார்

கொழும்பு,செப்.2

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் சிரேஷ்ட ஆலோசகரான பிரேஹ்மி முக்கியமான விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார்.

குறுகியகால விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைவரும் அவர் கொழும்பில் ஜனாதி

(20ஆம் பக்கம் பார்க்க)

# ஊடகங்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து நகரில் அடையாள எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப்.2

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து யாழ். நகரில் அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. முற்பகல் 10.30 மணியளவில் யாழ். பஸ்நிலையம் முன்பாக ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் சுமார் ஒருமணிநேரம் நடைபெற்றது.

இந்த எதிப்புப் போரட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஊடகவியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அண்மையில் தமிழ்ப் பத்திரிகைகள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்து

(20ஆம் பக்கம் பார்க்க)

# சந்திவெளியில் சுற்றிவளைப்பு

ஏறாவூர்,செப்.2

மட்டக்களப்பு - சந்திவெளிப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை காலை தொடக்கம் நண்பகல் வரை இராணுவத்தினரால் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலொன்று நடத்தப்பட்டது.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும்

(20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிளிநொச்சியில் மக்கள் எழுச்சிப் பிரவாகம்



பொதுச்சுடர் ஏற்றல்...



தேசியக் கொடி ஏற்றல்...



அகவணக்கம்...





எழுச்சி கீதம் இசைத்தபோது...



திரண்டு வந்திருந்த எம்.பிக்கள், பிரமுகர்கள்...



சன சமுத்திரத்தின் ஒரு பகுதி...




கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டிலிருந்து சில காட்சிகள்...

(படங்கள் : அற்புதன், பிரபா)

# ஊடகவியலாளர்கள் யாழ். நகரில் போராட்டம்...



ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று யாழ். பஸ் நிலையம் முன்பாக நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களை முதல் படத்திலும், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்:- கவிதரன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தெளிவான கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்த பிரதமர் மஹிந்த தயாரா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வுகாண்பது தொடர்பாக மேலோட்டமான சில கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்.

*'நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்துக்கு முன்னுரிமை கொடுப்பேன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட யாருடனும் இதற்காகப் பேசத் தயாராக இருக்கிறேன். நான் போருக்குப்போக மாட்டேன். போரை எதிர்க்கிறேன்; வெறுக்கிறேன். நான் ஒரு முழுமையான பௌத்தன். ஆனால், மற்ற மதங்களை மதிக்கிறேன். அதுவே எனது பலம்.'*

இவ்வாறு கூறியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற மிக முக்கிய - வலுமிக்க -பதவி ஒன்றுக்கான தேர்தல் விடயத்தில் கூட, தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக - ஒளிவு மறைவின்றி - தெளிவுபடுத்தித் தெரிவிக்கும் முதுகெலும்பு இன்னும் அவருக்கு வரவில்லை என்பதையே இது விடயத்தில் 'மதில் மேல் பூனையாக' இருந்துகொண்டு - ஒளித்துப் பிடிக்கும் விளையாட்டுப்போல - அவர் கூறும் இக்கருத்து எடுத்துக்காட்டுகின்றது.

ஈழத்தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தாம் வைத்திருக்கும் திட்டம் என்னவென்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தாமல் -

அந்தத் திட்டம் தமிழர் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதா என்பதை அறிந்துகொள்ளாமல் - தமிழர் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க - நடைமுறைச் சாத்தியமான - ஒரு தொடர் நடவடிக்கைத் திட்டத்தை அறிவித்து, அதைச் செயற்படுத்துவதில் தமக்குள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தும் விதத்தில், அது தொடர்பான பூர்வாங்க செயற்பாடுகளைத் திடசங்கற்பத்தோடு முன்னெடுத்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு முன்னதாக -

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசவும் தாம் தயார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பது, அவர் பகல் கனவு காண்கிறாரோ என்ற சிந்தனையைத்தான் எழுப்புகின்றது.

'நான் உண்மையான பௌத்தன்' என்றும், அதேவேளை, ஏனைய மதங்களையும் மதிக்கிறேன்' என்றும், 'அதுவே எனது பலம்' என்றும் கூடப் பிரதமர் கூறுகிறார்.

நல்லது, இந்தச் சந்தர்ப்பத்தில் , இரண்டரை தசாப்த காலத்துக்கு முன்னர் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிரஸ்தாபித்த ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். அப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தன இருந்தார்.

'ஜெயவர்த்தன உண்மையான பௌத்தராக இருந்திருப்பாராயின் (நடந்துகொண்டிருப்பாராயின்) நான்ஆயுதம் தூக்கவே நேர்ந்திருக்காது'. - என்று அப்போது தெரிவித்திருந்தார் பிரபாகரன்.

அடுத்தவரையும் (அயல் இனத்தாரையும்) மதிக்கும் பௌத்த சீலப்பண்பைச் சிங்களத் தலைவர்கள் கடைப்பிடித்திருப்பார்களேயானால், இலங்கைத்தீவில் இனச்சிக்கல் என்ற பூதாகாரக் குழப்பம் ஏற்பட்டிருக்கவேமாட்டாது என்பதையே பிரபாகரன் அவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார். இப்போதும்கூட இது பொருந்தும். நாட்டில் அடுத்த ஜனாதிபதியாக வரப்போகின்றவர், இலங்கைத்தீவில் பௌத்த சீலத்துக்கு இழுக்காக விளங்கும் பௌத்த - சிங்கள மேலாண்மை வாதத்திற்கு இடங்கொடுக்காமல் உண்மையான பௌத்தராகச் செயற்படுவாரேயானால், இனச்சிக்கலுக்கு இணங்கத் தீர்வுகாண்பது அப்படியொன்றும் கஷ்டமான விடயமல்ல. ஆனால், தம்மை முழுமையான பௌத்தன் என்று கூறிக்கொள்வதில் புளகாங்கிதம் அடையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் அதன் பின்னர் உண்மையான பௌத்தராக - பௌத்த சீலத்தையும் தர்மத்தையும் மதிப்பவராக - நடந்துகொள்வாரா என்பது கேள்வி. தமிழர் தரப்பிற்கு உள்ள சந்தேகமும் அதுவே.

தேர்தல் வெற்றிக்காக, பௌத்த - சிங்கள பேரினவாதிகளோடும், சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கவேண்டும் என்ற துவேச மனப்பாண்மையோடு செயற்படும் மேலாண்மைவாதிகளோடும் கூட்டுச்சேர்வதற்கு அவர் இப்போது துடியாய் துடிப்பதைப் பார்த்தால் தமிழர் தரப்பில் எழும் மேற்படி சந்தேகத்திற்கு நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

பிரதமர் மஹிந்தவிற்கு எதிராகக் களத்தில் நிற்கப்போகும் மற்றைய பிரதான வேட்பாளர் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அவரது அரசு ஆட்சியிலிருந்த 2002 - 2004 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான முயற்சிகள் ஒரு தீர்க்கமான கட்டம்வரை முன்நகர்ந்திருந்தன. அப்போது மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க எடுத்த - குழப்பும் நடவடிக்கையினால் அமைதி முயற்சிகள் தடைப்பட்டு முடங்கின என்பது ஊர் அறிந்த இரகசியம். எனவே, குறிப்பிட்ட கட்டம்வரை முன்னேறித் தேங்கிப்போயிருக்கும் அமைதி முயற்சி கள் தொடர்பாகத் தமது திட்டவட்டமான நிலைப்பாடு என்ன, ஆகக் குறைந்தது உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைத் தீர்வு என்ற தமிழர் தரப்பின் விட்டுக்கொடுப்புத் தொடர்பாகத் தமது முடிவு என்ன - என்பவற்றை எல்லாம் தேர்தலுக்கு முன்பதாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெட்டத்தெளிவாகத் தமது மக்களுக்கும், தமிழர்களுக்கும் வெளிப்படுத்தவேண்டும்.

அப்படிக் கொள்கைரீதியாகத் தமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்துவதை விடுத்து, புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசவும் தயார் என்று அறிவிப்பதும் தேர்தலுக்காக முன்வைக்கப்படும் வெற்றுவேட்டுப்பேச்சாகவும் வெளிவேஷமாகவுமே கருதப்படும். தீர்வு விடயத்தில்தெளிவானக கட்டம் வரை உறுதியோடு முன்நகராமல், தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசலாம், ஆரவாரம் பண்ணலாம் என்றெல்லாம் பிரதமர் மஹிந்த கனவு காண்பது சிறுபிள்ளைத்தனமே அன்றி வேறு இல்லை.

தமிழர்களுக்கு நியாயமானதை - நீதியானதை - அளிப்பதில் - பற்றுறுதியோடு செயற்பட்டு அதனை நிரூபிக்காத எந்தச் சிங்களத் தலைமையையும் சந்தித்துப் பேச பிரபாகரன் இணங்குவார் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

எனவே, ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவிருக்கும் இந்தக் குறுகிய காலத்திற்குள் இரண்டரை மாதத்திற்குள் இனப்பிரச்சினை விவகாரம் சம்பந்தமாக வெற்றுப்பகட்டுப் பேச்சுகளையும், சமாளிப்புக் கருத்துகளையும் முன்வைப்பதை விடுத்து, திட்டவட்டமான - தீர்க்கமான - தெளிவான - கொள்கை நிலைப்பாடுகளையும், வரையறைகளையும் வெளிப்படுத்தும் விதத்தில் பொறுப்புடன் செயற்படப் பிரதான கட்சி ஒன்றின் வேட்பாளரான பிரதமர் மஹிந்த முன்வரவேண்டும். அதுவே நியாயம் அதுவே, அவரது பொறுப்பும் கடமையுமாகும்.

## ஊடகங்கள் மீதான வன்முறைகள்:
# கண்டிப்பதோடு நின்றுவிடாமல் உரிய நடவடிக்கையும் எடுங்கள்
### பிரதமரை வற்புறுத்துகிறார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு,செப்.2

ஊடகவியாலளர்கள் மீதும் ஊடகங்கள் மீதும் தாக்குதல் நடத்துபவர்களைக் கண்டிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி ஐ.தே.கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளனர்.

ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துபவர்களை வெறுமனே கண்டித்தால் மட்டுமே போதாது. அதனால் பயன் ஏதுமில்லை. 'சுடர்ஒளி' பத்திரிகை நிறுவனம் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நானாயக்கார கூறினார்.

பிரதமர் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் திசையில் நடந்து கொண்டிருக்கும் ஜே.வி.பியினர் வெளிப்படையாக பத்திரிகையாளர்களையும் ஊடக நிலையங்களையும் தாக்கிவருகிறார்கள். 'சுடர்ஒளி' பத்திரிகையாளர் ஜே.வி.பி. கூட்டமொன்றில் வைத்து தாக்கப்பட்டுமிருக்கிறார் என்று அவர் கூறியுள்ளார்.

(ப)

# உரிமைப் பிரகடன மாநாட்டுக்கு தென்மராட்சியில் பிரதேச செயலணி

தென்மராட்சி,செப்.2

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தமிழர் உரிமைப் பிரகடன மாநாடு தொடர்பான ஏற்பாடுகளில் ஓர் அங்கமாக தென்மராட்சிப் பிரதேசத்துக்கென செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு தொடர்பான தென்மராட்சிப் பிரதேச செயலணிச் செயலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கட்சி அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தலா பத்துப்பேர் கொண்ட கிராமியக் குழுக்கள் நியமிக்கப்பட்டு பிரசாரப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச செயலணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், கொள்கை பரப்பாளர்களாக க.அருந்தவபாலன், ந.சற்குணராசா,விஜயருபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய எழுச்சிச் செயலணியின் பிரசாரப் பணிகள் இன்று மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் ஆரம்பித்து தவசிக்குளம், விடத்தற்பளை, பாலாவி, கொடிகாமம், கச்சாய் ஆகிய இடங்களிலும் நாளை 3ஆம் திகதி கைதடிப் பிரதேசத்திலும் 4ஆம் திகதி மீசாலை, சங்கத்தானை,கோவில் குடியிருப்பு ஆகிய இடங்களிலும்நடைபெறவுள்ளன.

பிரசாரப் பணி தொடர்பாக மேலதிக விடயங்களை செயலணி செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அறிவித்துள்ளார். (9-117)

# ஆழிப்பேரலை உதவிப் பொருள்கள் பழுதடைந்தவை என்று தடுத்துவைப்பு
### பிரிட்டனிலிருந்து கொள்கலன்களில் வந்தவை

கொழும்பு,செப்.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென அரசசார்பற்ற நிறுவனமொன்று ஐக்கிய இராச்சியத்திலிருந்து (பிரிட்டன்) தருவித்த ஒன்பது கொள்கலன்கள் (கென்டயினர்) கொண்ட டொபி மற்றும் உணவுப் பொருள்கள் காலாவதியான திகதியைக் கொண்டதாக அமைந்ததால் அவை பாவனைக்கு உதவாதன எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று கொள்கலன்கள் கற்பிட்டிப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கத் தீர்மானிகப்பட்டது.

எனினும், இவற்றினைப் பரிசோதனை செய்த மாவட்ட வைத்திய அதிகாரி முஹம்மது.ரவூப், பொது சுகாதார உத்தியோகத்தர் ஆர்.டீ.விக்கிரமசிங்க ஆகியோர் பல வருடங்களுக்கு முன்பே இவ்வுணவுப் பொருள்கள் காலாவதியாகிவிட்டன. எனவே, பாவனைக்கு உதவாது என்றும் தெரிவித்தனர்.

இதையடுத்து உணவுப் பொருள்கள் விநியோகம் செய்வது தடைசெய்யப்பட்டது.

தற்சமயம் இங்குள்ள தனியார் வரவேற்பு மண்டபத்தில் இப்பொருள்கள் குவித்துவைக்கப்பட்டுள்ளன. (ஒ-க)

# 'சுனாமி' பாதித்த மக்களுக்கென 4,973 நிரந்தர வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 4 ஆயிரத்து 973 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு 26 உதவி வழங்கும் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 5 ஆயிரத்து 800 குடும்பங்களிற்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாக யாழ்.செயலகத் தகவல் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவற்றில் 4 ஆயிரத்து 973 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இவற்றுள் பருத்தித்துறையில் ஆயிரத்து 823 வீடுகளும் மருதங்கேணியில் 3 ஆயிரத்து 150 வீடுகளும் அமைப்பதற்கு முடிவாகியுள்ளது.

இதேவேளை -

பல நிறுவனங்கள் வீடமைக்கும் பணியை ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றன. இதில் முதலாவது நிரந்தர வீடு பூர்த்தியாக்கப்பட்டு அண்மையில் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-202-204)

## பழுதடைந்த மா விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.2

தென்மராட்சியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் பாவனைக்கு உதவாத கோதுமை மா விநியோகிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சசெயலகத்தினால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்ட கோதுமை மாவே பாவனைக்குப் பயன்படுத்த முடியாதளவிற்கு பழுதடைந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-ரி)

## பல்கலை. அனுமதிக்கு ஆங்கிலத்தில் சித்தி அவசியமில்லை

காரைதீவு,செப்.2

ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தின் பெறுபேறு சம்பந்தப்பட்ட மாணவரின் பல்கலைக்கழக அனுமதியைப் பாதிக்காது. பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கிலப் பாடப் பரீட்சைப் பெறுபேறு ஒரு நிபந்தனை இல்லை.

இவ்வாறு கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டிமெல் கூறியுள்ளார். ஆங்கில பாடச் சித்தியிருந்தால் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்பது பொதுவாக கருத்து நிலவுவது குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் கூறி னார்.

(ஒ-84)

## உதயவாக்கு

வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் மனநிலையே எமக்கு வேண்டும்.

- சுவாமி விவேகானந்தர்.

## நாளை

ஆவணி 18
சனிக்கிழமை
03.09.2005
திதி: அமாவாசை
பின்னிரவு: 12.51 வரை
நட்சத்திரம்: மகம்
பிற்பகல்: 05.33 வரை
சுபநேரம்: 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35
(யாவும் பழைய நேரப்படி)

# புலமைப்பரிசில் பரீட்சைமுடிவின் மீள்பரிசீலனை நிறுத்தப்படலாம்?

கொழும்பு,செப்.2

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்யும் நடவடிக்கை இந்த ஆண்டு முதல் நிறுத்த அல்லது மட்டுப்படுத்த பரீட்சைத் திணைக்களம் உத்தேசித்து வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களின் திருத்தப்பணிகள் முடிந்த பின்னர் அனைத்து விடைத்தாள்களையும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த விசேட குழுக்கள் அமர்த்தப்படவுள்ளன என்றும்-

அதனால், பரீட்சை முடிவு அறிவிக்கப்பட்ட பின் மாணவர் விருப்பின் பேரில் மீண்டும் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும்- பரீட்சை ஆணையாளர் நாயகத்தை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி விடைத்தாள்கள் திருத்தும் பணி தொடர்பாக சுமார் 50 குழுக்கள் வரையில் அமர்த்தப்படவுள்ளதோடு, ஒவ்வொரு குழுவுக்கும் விசேட பரிசோதகர்கள் இருவர் வீதம் நியமனம் செய்யப்படவுள்ளனர். இப்பரீட்சை தொடர்பான விடைத்தாள்களைத் திருத்தும் பணி அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது- என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-206)

# காமினி திஸநாயக்க கொலை வழக்கு: விசாரணைகளுக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு ,செப்.2

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் காமினி திஸநாயக்கவின் கொலை தொடர்பான புலன் விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டும் தொடரப்போவதில்லையென்று குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியிடம் அறிவித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராகவிருந்த காமினி திஸநாயக்க கொழும்பில் கூட்டமொன்றில் தேர்தலுக்கு சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கின் மூலக்கோப்புகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும், எனவே, இது குறித்து மேற்கொண்டும் புலனாய்வு தேவையில்லையெனவும் பிரதி சொலிசிஸ்டர் ஜனரலினால் தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர். சுமார் பத்துவருடங்களுக்கு முன் நடந்த குறித்த சம்பவம் தொடர்பாக நடைபெற்றுள்ள விசாரணைகளில் எந்த ஒரு நபரும் குற்றஞ்சாட்டப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புலனாய்வாளர்களின் கருத்துக்களைக் கேட்டு ஆராய்ந்த பின்னர் மேலதிக நீதிபதி அமலிரணவீர வழக்குக் கோப்புகளை கிடப்பில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ப)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 12 - 1937



மறைவு 03 - 08 - 2005

**திருமதி நவரத்தினம் தங்கரெத்தினம்**
(புவனேஸ்வரி)

*அம்மா என்ற அமுத வார்த்தையின்*
*அருமை உணர்ந்து தவிக்கின்றோம்*
*பாலுடன் பாசமும் கலந்து ஊட்டிய*
*பாக்கிய தெய்வமே எங்கு சென்றாய்?*
*எமை விட்டு நீர் எங்கு சென்றாலும்*
*நீர் தந்த எம் இதயம் என்றும்*
*உம்மைத் தேடும்...*

**இன்று (02.09.2005) வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

C.C.T.M வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்.** (39530) (21.14.15)


## சாவகச்சேரி ஆலயத்தில் திருட்டு

தென்மராட்சி,செப்.2

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டன.

ஆலயத்துக்குள் புகுந்த திருடர்கள் தங்கத் தகடுகள், வெள்ளியிலான விக்கிரகப் பொருள்கள் உட்படப் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இத்திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-117)

## சமுர்த்தி முத்திரை விநியோகம்

தென்மராட்சி ,செப்.2

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கான உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கைதடி, சாவகச்சேரி ஆகிய சமுர்த்தி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கான முத்திரைகள் அந்தந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்படுவதாகவும்-

கொடிகாமம், வரணி ஆகிய சமுர்த்தி வலயங்களைச்சேர்ந்த குடும்பங்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சமுர்த்தி முத்திரைகளுக்கு ஜூலை மாதம் தொடக்கம் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளமை தெரிந்ததே. (ஒ-117)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 04 - 1930



மறைவு 13 - 09 - 2004

**அமரர் ஞானமூர்த்தி ஏகாம்பரம்**
(ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்)

*தந்தைக்குத் தந்தையாய்*
*தாய்க்குத் தாயாக நின்று*
*எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே*
*சீரும் தந்து சிறப்புடன் வாழவைத்த*
*எமது உயிர்த் தந்தையே - என்றும்*
*அழியாத நினைவுகளுடன் உங்கள்*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

உசன்,
மிருசுவில் (39539)(21.14.15)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

**பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் 30.08.2005 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை புகவீகவல்லியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்வநாயகியின் மருமகனும் மங்களேஸ்வரியின் (ஆசிரியர், யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் தர்சினி (ஆஸ்திரேலியா), மாதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோகேஸ்வரன் (நாவலப்பிட்டி), செல்வராஜா (கனடா), ஜெயராணி (கனடா), புஸ்பராணி (ஹொலண்ட்), பாலகிருஷ்ணன் (கனடா), மோகனராணி (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரஞ்சோதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2005) சனிக்கிழமை ரட்ணம் மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கொழும்பு. (39525)(21.14.15) **மனைவி, பிள்ளைகள்.**

# உறுதியும், உத்தரவாதமும் தரும் டியூரோ தயாரிப்புகள்!




விநியோகித்து சந்தைப்படுத்துவோர்:
**டியூரோ பைப் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
307, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-13
தொலைபேசி : 2440759, 2440760, 2335636 பெக்ஸ்: 2437646

யாழ் ஏகவிநியோகஸ்தர்:
**நாராயணா கட்டிடப் பொருட்கள் வர்த்தகர்**
87, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2225390

TNT Grafx

# பண்டாரவன்னியன் விட்டுச்சென்ற பணியைத் தேசியத் தலைவர் தொடர்கிறார்

## 202 ஆம் ஆண்டு நிறைவுவிழாவில் கஜேந்திரன் எம்.பி. உரை

ஒட்டுசுட்டான், செப்.2

பண்டாரவன்னியன் போன்ற மன்னர்களின் வழித்தோன்றலில் வந்த நாங்கள் அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபடவேண்டும். இந்த நோக்கிற்காகவே எமது தேசியத் தலைவர் பண்டாரவன்னியன் விட்ட பணியைத் தொடர்கின்றார்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

அண்மையில் முல்லைத்தீவில் இடம்பெற்ற பண்டாரவன்னியனின் 202 ஆவது வெற்றிவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

ஆங்கிலேயர் இந்த மண்ணை ஆக்கிரமித்தபோது பிரிந்திருந்த இலங்கையின் பல பாகங்களையும் தங்கள் நிர்வாகத் தேவைக்காக ஒன்றுபடுத்தினார்கள். அதன் காரணமாகத் தனி இராட்சியமாகவிருந்த மூன்று தமிழ் இராட்சியங்களும் ஒன்றிணைந்து ஐக்கிய இலங்கை என்று ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டது.

அவ்வாறு கொண்டுவரப்பட்டு ஆங்கிலேயரால் ஆட்சிசெய்யப்பட்டாலும்கூட, அவர்கள் இலங்கையை விட்டு விலகும்போது எமது பிரதேசங்களையும் இறைமைகளையும் எம்மிடம் ஒப்படைக்காமல் சிங்களவர்களிடம் ஒப்படைத்ததன் விளைவாகத்தான் இன்று பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

எங்களுடைய இறைமைகளை சிங்களவரிடம் தாரைவார்த்துக்கொடுத்ததன் பயனாக, சிங்கள இனவாதம் எங்களை ஆளப்படுகின்ற இனமாகக் கருதி தங்களை ஆறுகின்ற இனமாகக்கொண்டு எம்மீது அடக்குமுறைகளையும் அடாவடித்தனங்களையும் படிப்படியாக ஆரம்பிக்கத் தொடங்கினர்.

ஆரம்பத்திலே அவ்வாறான செயற்பாடுகள் இல்லாதிருந்தாலும்கூட, காலம் செல்லச் செல்ல அவர்களுடைய அணுகுமுறைகள் மாறி இலங்கையை பௌத்த சிங்கள நாடாக மாற்றவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் அவர்கள் செயற்படத் தொடங்கினர். இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை முழுமையாக அழித்து இதனை தனிச்சிங்கள நாடாக ஆக்கவேண்டுமென்பதற்காகச் சுதந்திரம் அடைந்த காலம் தொண்டு பல்வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டிருந்தார்கள். இதன்படியில் சிங்களம் மட்டும் தான் என்ற தனிச்சட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள்.

அதற்குப் பின்னர் கல்வித் தரப்படுத்தலை அறிமுகம் செய்தனர். தமிழருக்கெதிரான இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டிருந்தார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழர்களின் இனம், மதம் மற்றும் மொழிகளை அழித்து தமிழர்களை முகவரி அற்றவர்களாக ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தை அவர்கள் நிறைவேற்ற முனைந்தனர். இதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளையும் அவர்கள் முன்னெடுத்தனர். இவ்வாறான இந்தச் சூழ்நிலையிலேதான் நாங்கள் ஆண்டுவந்த ஓர் இனம். எங்களுடைய ஆட்சியை மீளவும் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும். நாங்கள் அடிமைகளாக வாழமுடியாது என்ற எண்ணம் உருவானது.

அந்த அடிப்படையிலே இன்று இந்த விடுதலைப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது - என்றார். (எ-341-202)

## இடைக்கால நிர்வாகம் குறித்து வினாடிவினா

வட்டக்கச்சி, செப்.2

பவ்ரல் அமைப்பு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

சமஷ்டி முறை, ஜனநாயகம், மனித உரிமைகள், செங்கோலாட்சி, இடைக்கால நிர்வாகம், மானுட கௌரவம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளதாகவும்-

ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பிலுள்ள 5பேர் கொண்ட குழு இப்போட்டியில் பங்குபற்ற முடியும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-405-202)

## சந்தைக்கு வருவோரை துரத்தித் துரத்திக் கடிக்கும் குரங்கு

பரந்தன், செப்.2

நாய்களுக்கு நாங்களும் சளைத்தவர்களல்ல என்று மனிதர்களைப் பதம் பார்க்கத் தொடங்கிவிட்டனவாம் குரங்குகள்.

வட்டக்கச்சி சந்தைக்கு வரும் நுகர்வோரே இந்தத் தொல்லைக்கு ஆளாகிவருகின்றனர் எனக் கூறப்பட்டது.

சந்தை கூடும் நேரங்களில் சந்தைக்குள் புகும் குரங்கு ஒன்று அங்குள்ளோரைத் துரத்தித் துரத்திக் கடிக்கின்றதாம்.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுத்துச் செயற்படவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-352-202)



சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட இளையோர் செயற்பாட்டு நிறுவனம் வண்ணாங்குளம் பிரதேச சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கியது.

(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்.)




## கனகாம்பிகைக்குளம் பாடசாலையில் கட்டட வசதியின்றி பெரும் சிரமம்

பரந்தன், செப்.2

கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை போதிய கட்டட வசதிகளின்றி பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கிவருகின்றது.

இப் பாடசாலை கிளிநொச்சி வலயத்திற்குட்பட்டது. நகரை அண்டிய பாடசாலையாகவும் இது உள்ளது. இங்கு 750 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதி இல்லையென்றும் -

உள்ள கட்டங்களும் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளன என்றும் - பாடசாலைச் சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் - இத்தகைய நிலைமைகளால் மாணவர்களின் கல்விநிலை பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகக் கல்விச் சமூகம் சார்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

(எ-352-202)

## செம்மலை கிழக்கில் 120 வீடுகள் இரண்டாவது கட்டமாகக் கையளிப்பு

புதுக்குடியிருப்பு, செப்.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட செம்மலை கிழக்கு கிராம மக்களுக்கு 2 ஆம் கட்டமாக 120 தற்காலிக வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் செம்மலை கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிராம அலுவலர் வ.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் செம்மலைப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார்.

தொடர்ந்து 'சீற்' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகளை சம்பிரதாயபூர்வமாக வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இவ் வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில், ஊரக அபிவிருத்திக் குழுத் தலைவர் நா.மயில்வாகனம், 'கொடக்' நிறுவனப் பிரதிநிதி செ.மதியழகன், ஊரகக் கிளைப் பொறுப்பாளர் ஆகியோர் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர். (எ-353-202)




செம்மலை மத்திய மருந்தகக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் செம்மலை அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றுவதையும் முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராசா மருந்தகத்தின் பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

(படம்- புதுக்குடியிருப்பு செய்தியாளர்)

## வலது பக்கத்தால் வாகனம் செலுத்தின் கடும் நடவடிக்கை

### நகரப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தகவல்

கிளிநொச்சி, செப்.2

வீதிகளில் வலப்பக்கத்தினால் வாகனங்கள் செலுத்துவோர் தமிழீழ காவல்துறையினரால் கடுமையான சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறு தமிழீழ காவல்துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வாகனம் செலுத்துநர்கள் வலப்பக்கத்தினால் வாகனத்தினைச் செலுத்தும்பொழுது பயணிக்கும் பாதசாரிகள் முதல் இடது பக்கத்தினால் வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகள் வரை பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன், வீதி விபத்துக்கள் ஏற்பட க் காரணியாகவும் அமைகின்றது.

எனவே, வீதிகளில் இடப்பக்கப் பயணத்தில் வலப்பக்கமாகப் பயணிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று தண்டப்பணம் அறவிடப்படும்.

அதேவேளை- இரவு வேளைகளில் முகப்பு வெளிச்சமின்றி சைக்கிள் முதல் சகல வாகனங்களும் செலுத்தும் அனைவரும் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## முல்லைத்தீவு எழுச்சி நிகழ்வுக்கு ஏற்பாடுகள்

ஒட்டுசுட்டான், செப்.2

எதிர்வரும் 14 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வுக்கான முன்னோடி ஏற்பாடுகள் மாவட்டத்தில் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் பரவலாக இடம்பெற்றுவருகின்றன.

எழுச்சிப் பிரகடன ஏற்பாட்டுக்குழுவின் ஒருங்கமைப்பின் கீழ் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் கருத்தூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த திங்கட்கிழமை ஒட்டுசுட்டானிலும், மாங்குளம் தண்டுவான் கரைதுறைப்பற்று ஆகிய இடங்களிலும் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

(எ-341-202)

## கரைச்சிக்கோட்ட மாணவரின் சமூகக்கல்வி போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி, செப்.2

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சமூகக்கல்வி எழுத்துப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் 5 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் 6,7**

**வகை I**: ச.செந்தூரன் (பன்னங்கண்டி இ.த.க.பா.), ந.யோகிசா (ஸ்கந்தபுரம் இல-II த.க.பா), அ.டிலக்சன்ராஜ் (யூனியன்குளம் அ.த.க.பா.), ச.பிரசாந்தினி - (பன்னங்கண்டி இ.த.க.பா), இ.கினோசினி (பன்னங்கண்டி இ.த.க.பா).

**வகை II**: ப.நிரோஜன் (புனித பற்றிமா றோ.க.வித்தி.), வ.மதுஜீவனா (வன்னேரிக்குளம் ம.வி.), து.டிசாந்தினி (வன்னேரிக்குளம் ம.வி.), மு.ரகுராம் (ஊற்றுப்புலம் அ.த.க.பா.), த.நிகர்சன் (ஐயனார்புரம் அ.த.க.பா).

**வகை III**: ர.வைஸ்ணவி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), ச.வேணிலன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ச.தர்சினி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), தே.கர்சாலின் (புனித திரேசா பெண்கள் கல்லூரி), ம.கிருத்திகா (உருத்திரபுரம் ம.வி.), வி.ட்யாளினி (அக்கராயன் ம.வி.), க.ஐங்கரன் (திருவையாறு ம.வி.), ப.சங்கீதன் (திருவையாறு ம.வி.)

(வளரும்) (எ-405-202)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

கோப்பாய் கல்வியியற்கல்லூரிக்குத் தெற்குப் பக்கமாக 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:, கிளி, முடமாவடிச் சந்தி, நல்லூர் (கிளி கடை). (39507)

### வானொலி நாடகம் எழுதுவது எப்படி?

வானொலி நாடகம் எழுதுவதில் உள்ள நுட்பங்கள் எல்லாவற்றையும் தரும் ஒரே ஒரு நூல் 400 நாடகங்கள் எழுதிய கலா பூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. மூன்று நாடகங்களும் கட்டுரைகளும் ரூபா 150/-. (39496)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

இளவாலை-யாழ்.788 இல் சேவையாற்றும் சிற்றூர்தியில் சாரதியினால் 25.08.2005 அன்று கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 788, சிற்றூர்திச் சேவைச்சங்கம், சண்டிலிப்பாய். (39521)

### தவறிவிட்டது

மனுவல் சூசைதாசன் என்பவருடைய கடவுச்சீட்டு 29.08.2005 அன்று குருநகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: வின்சன் இம்மனுவல், இல. 8, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம். T.P. 0777 248366 (39523)

### The Royal College of Jaffna

பாலர் பாடசாலை 'ஆங்கில மூலம்' மூன்றாம் தவணை **ஆரம்பம்:-05-09-2005. 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.** (39522)(21.

## சிறிய மின்குமிழை குழந்தை விழுங்கியது

தென்மராட்சி, செப்.2

'டோர்ச்லைட்' மின்குமிழை ஒன்றரை வயதுக் குழந்தை விழுங்கியது. மீசாலை வடக்கைச் சேர்ந்த குழந்தையே சிறிய மின் குமிழை விழுங்கியது.

இக் குழந்தை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (9-117)

## பனாட்டு 'சீசன்'

குருநகர், செப்.2

நெடுந்தீவில் பனாட்டு 'சீசன்' ஆரம்பமாகி உள்ளது. இங்கு ஒரு கிலோ பனாட்டு ரூபா 40 ஆக விற்பனை செய்யப்படுகின்றது. இதே நேரத்தில் புளுக்கொடியல் மற்றும் பச்சை ஒடியல் என்பன கிலோ ரூபா 40 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. (9-51)

## நன்கொடை

தென்மராட்சி, செப்.2

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் சுகாதார சேவைக்கென 10 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ள இரத்தினம் சுரேந்திரன் என்பவர் இத் தொகையினைக் கழகத் தலைவர் லயன் சி.சிவபால சுப்பிரமணியத்திடம் அண்மையில் கையளித்தார். (9-117)

## சத்திர சிகிச்சை நிபுணர் சேவை

வரணி, செப்.2


யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ரவிராஜ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பின்வரும் தினங்களில் சிகிச்சைகளில் ஈடுபடவுள்ளார் என வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி, ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி, நவம்பர் மாதம் 11ஆம் திகதி, டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி ஆகிய தினங்களில் அவர் விஜயம் செய்யவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (9-170)

## படையினர் ரோந்து

வடமராட்சியில் இராணுவத்தினரின் ரோந்துப் பணி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. அவசர காலச் சட்டத்தைத் தொடர்ந்து கண்ணி வெடி அகற்றும் கருவிகளுடன் சைக்கிள்களில் அதிகளவிலான படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (9-70)


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



### திரு.க.ஆனந்தராசா

வளம் நிறைந்த வன்னி பெருநிலப்பரப்பின் மக்கள் வங்கிகளின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சேவையாற்ற வந்திருக்கும்

**செயல்வீரன் திரு.க.ஆனந்தராசா**

அவர்கள் வன்னி பெருநிலத்திற்கு சேவை செய்து பலருடைய பாராட்டும் புகழும் பெற்று மேலும் பதவி உயர்வுகளைப் பெறவேண்டும் என வாழ்த்துகிறோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

**தும்பிக்கையான் களஞ்சியம்,**
117, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(39499)(46-21.14.17)

## தொல்வினையால் துயரமுறும் தமிழர் வாழத் துணை நின்று பகையழிக்க வருவாய் முருகா!

உள்ளூர் சவர்க்கார உற்பத்தியில் மிகப் பழைமை வாய்ந்த மில்க்வைற் சவர்க்கார தொழிலகத்தின் தரமான சவர்க்காரங்களைக் குறைந்த விலையில் பெற்றிட

**மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்**
தபால்பெட்டி இல.77
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/44684) (21.14.17)

## சிந்தையில் வைத்துப் போற்றுகின்றோமே!



### கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை

சிந்தையெலாம் நிறைந்து விட்ட சீராள!
ஆளாக்கி எமையெல்லாம் ஏற்றி வைத்தீர்
தந்தையாய் கல்வி யெமக் கூட்டினீர் ஐயா!
தாளடியைச் சேவித்து உருகுகின்றோம்.

சிவ-பத-நவேந்திரன்

30,-ஹேசல் தோட்டம்,
மிடில்செக்ஸ்,
லண்டன்.

(39519)(46-21-17-14)

அழகா முருகா! எம்முள்வா! இதயத்து சுமைகளை இறக்க வா!

## யாழ். நகரில் நவீன திரைச்சீலைகள் (Curtain)

நவீன முறையில் உங்கள் இல்லங்கள், காரியாலயங்கள், வைத்தியசாலைகள், உல்லாச விடுதிகள், கணனி நிலையங்கள் ஆகியவற்றுக்கும் மற்றும் உங்கள் இல்ல மங்களகரமான நிகழ்வுகளுக்கும் மனதைக்கவரும்

**திரைச்சீலைகள்**

நேரடியாக வந்து உங்கள் விருப்பப்படி கைதேர்ந்த தொழிலாளர்கள் மூலம் ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும்.



**ஐடியல் கேட்டின் டெக்கோர்**

96, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
உடன் தொடர்புகளுக்கு:- 0777-563946, 077 3013239, 011- 2727218

(C/44869)(51)

## ஞானோதய அக்கடமி

சங்கத்தானை சாவகச்சேரி

**2006 DAY CLASS கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவு ஆரம்பம்.**

**ஆசிரியர் குழாம்**

| கலைப்பிரிவு | | வர்த்தகப்பிரிவு | கணித விஞ்ஞானப்பிரிவு |
|---|---|---|---|
| தமிழ்: | திரு.இரா.அகிலன் | பொருளியல்: | பௌதிகவியல்: |
| இந்து நாகரிகம்: | திரு.சுரேஷ் | திரு.அன்ரனி | திரு.சந்திரப்பிரகாசம் |
| இந்து சமயம்: | திரு.ஜோதீஸ்வரன் | திரு.யோகசிங்கம் | இரசாயனவியல்: |
| புவியியல்: | திரு.மயூரன் | கணக்கீடு: | திரு.அன்பழகன் |
| வரலாறு: | திரு.பத்மன் | திரு.பார்த்தீபன் | இணைந்த கணிதம்: |
| நாடகமும் | | வணிகக்கல்வி: | பிரபல ஆசிரியர் |
| அரங்கியலும்: | திரு.ராம் | திரு.பசில் | |
| அரசறிவியல்: | திரு.பொன்.சந்துரு | அளவையியல்: | |
| கிறிஸ்தவ நா. | திரு.சுதா | திரு.ஜெயசுரேஷ் | |
| | | ஆங்கிலம் | |
| | | திரு.ஜோதி | |

**ஆரம்பம்:**
வர்த்தகம்: 04.09.2005 ஞாயிறு காலை 10.00 மணி
கலை: 04.09.2005 ஞாயிறு நண்பகல் 12.00 மணி

(39516) (21.14.17)

## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

அன்னையின் மடியில் 26 - 05 - 1988



ஆண்டவன் அழிப்பில் 30 - 08 - 2000

### செல்வி பாமினி சிவராசா

(யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய மாணவி)

வளம்மிகு இலங்கையின் வளமுறு சிகரமாம் யாழ்ப்பாணத்தில்
சிற்றூராம் வாதரவத்தையின் குடிமகன் - சிவராஜாவின்
இளைய புத்திரியாய் வையகத்தில்
வந்துதித்த உனை வாழ்தி வளர்த்திடும் நாளினிலே

பச்சிளம் பாலகியே - பாமினி உன்
பால்முகம் காணாது தவிக்கின்றோம் நாமிங்கே
அழகான உன் மேனிதனைத் துண்டிக்க
அம்பாகவந்து எறிகணைதான் காலனான்தோ?

பாடசாலையில் கல்வியதில் சிறந்திட்டாய்
கேட்பவர் வியக்க கானமழை இசைத்திடுவாய்
பாரினிலே இவைகளைப் பறக்கவிட்டு
பறந்தோடி மறைந்ததேனோ?

உன் பிரிவால் என்றும் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அத்தான், அண்ணி, பெறாமகள்மார், மருமகள்.

புத்தூர் கிழக்கு,
வீரவாணி,
வாதரவத்தை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 10 - 1955



உதிர்வு 12 - 09 - 2004

### அமரர் செல்லத்துரை சிவகுமார் (வவா)

(சிவகுமார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், இருபாலைச் சந்தி)

சொத்தாய் வாழ்ந்த சொர்க்கத் தங்கமே!
சொந்தமென வந்த திருச் செல்வமே!
பற்றாய் இருந்தாயே பாசமாய்க் காத்தாயே!
உங்களது இழப்பை எம்மால் நிறைவுசெய்ய முடியவில்லையே!

உங்களது கனவுகளை நனவாக்க
என்றென்றும் உங்கள் எண்ணம்போல் நாம் நடக்கின்றோம்
என்றும் உங்கள் ஆசி வேண்டும் எங்களுக்கு!

உங்கள் பிரிவை எண்ணி வாடும்:
**தாய், மனைவி, பிள்ளைகள்.**

கிராமசபை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(39515)(21.14.33.17)

# அனுமதி பெறாது கட்டடம் கட்டுவோர் மீது நடவடிக்கை

தென்மராட்சி,செப்.02

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சபையின் அங்கீகாரமின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது நீதிமன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த பகுதிகளில் புனர்நிர்மாணம் என்ற போர்வையில் பலர் அங்கீகாரமின்றி கட்டடங்களை அமைத்து வருவதாகவும்-

சபையின் அங்கீகாரமின்றி கட்டடங்கள் அமைக்கக்கூடாது என அறிவித்துள்ள போதிலும், சிலர் சட்டவிரோதமாகக் கட்டடங்களை அமைத்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் இவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்தார். (எ-112)

# மட்டக்களப்பு மீனவர் சங்கத்தினர் இங்குள்ள நிலையைப் பார்வையிட்டனர்

வடமராட்சி,செப்.2

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 40 பிரதிநிதிகள் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துசென்றனர்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், சேவா லங்கா ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் இந்த விஜயம் இடம்பெற்றது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் செயற்பாடு, நிர்வாகக் கட்டமைப்பு, கிளைச் சங்கங்களின் பணிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை செயற்படுத்தி பயன்படுத்திக்கொள்ளும் முறைகள், திட்டங்களை நிறைவேற்றுவது என்பன போன்ற விடயங்களை மட்டக்களப்பு கடற்றொழிலாளர் குழு நேரில் பார்வையிட்டது.

மட்டக்களப்பு கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் குழுவை பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் க.சூரியகுமாரன் வரவேற்று சமாசத்தின் கட்டமைப்புத் தொடர்பாக விளக்கம் அளித்தார். (ஒ-173)

# நீதிமன்ற அமைதியை குலைத்த 16 பேருக்கு அபராதம் விதிப்பு

நீதிமன்ற வளாகத்தில் சத்தமிட்டு குழப்பம் விளைவித்து நீதிமன்ற அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 16 பேருக்கு தலா 500 ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு ஒன்றின விசாரணைக்கு வந்திருந்தவர்களில் 11 பெண்கள் உட்பட 16 பேர் நீதிமன்ற வளாகத்தில் சத்தமிட்டு அமைதியைக் குலைத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மாதம் 22 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, அனைவரையும் எச்சரிக்கை செய்து தலா 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-117)

# நாவற்குழியில் திருட்டு மணல் அகழ்வை தடுத்தோரைத் தாக்கியவர்கள் காயம்!

வலி.வடக்கு, செப்2

நாவற்குழிப்பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வை தடுக்க முயற்சித்த இளைஞர்களை தாக்கியவர்கள் வைத்தியசாலையில் பலத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழிப் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் உரிமையாளருக்குத் தெரியாமல் கடந்த சில மாதங்களாக சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றும் நடவடிக்கை அதிகமாக இடம்பெற்று வருகின்றது.

இது சம்பந்தமாக காணி உரிமையாளர்கள் பல தடவைகள் அதிகாரிகளிடம் முறையிட்டும் பயனேதும் கிட்டவில்லை.

இந்நிலையில் காணி உரிமையாளர்கள் கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் முறையிட்டனர். இளைஞர்களும் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களைத் தடுக்க முயற்சித்தனர். அப்போது மணல் அகழ்வு உபகரணங்கள் மற்றும் பொல்லுகள் போன்றவற்றை பயன்படுத்தி தாக்கமுற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இளைஞர்கள் சுயபாதுகாப்பு செயற்பாட்டில் ஈடுபட்டனர். அவ்வேளையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்தில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் ஆகியவை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

# கோவில்பற்று கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனைக்கு புதிய கட்டடம்

வலி.தென்மேற்கு, செப்.2

மானிப்பாய், கோயில் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய தலைமைப் பணிமனை ஒன்றை நிர்மாணிப்பதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தற்போது பணிமனை செயற்பட்டு வரும் கட்டடம், காரியாலய அமைப்புக்கு சற்றும் பொருத்தமாக இல்லாதிருப்பதாகவும்-மிகப்பழமை வாய்ந்ததாக உள்ளதாகவும்-இதனால் சங்கத்திற்கு புதிய பணிமனை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியைக் கொண்டு இக்கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும்-தற்போதைய கட்டட பொருள்களின் விலை ஏற்றம், கட்டட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றினால் இக்கட்டடத்தை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு மேலும் 30 லட்சம் ரூபா தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கத்தின் முன்னாள் பணியாளர்கள்,நலன்விரும்பிகள் ஆகியோரிடமிருந்து நிதி உதவிகோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (9-135)

# வீடமைப்புத் திட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,செப்.2

பருத்தித்துறை, பொலிகண்டி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பான் நிதியுதவியுடன் யு.என். கபிற்றாஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்திற்கான 6 ஆம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

6 ஆம் கட்ட கொடுப்பனவுக்காக 20 லட்சம் ரூபாவை யு.என். கபிற்றாஸ் நிறுவனத்தின் நகர முகாமை யாளர் க.பரமேஸ்வரன் கடந்த வாரம் தனது அலுவலகத்தில் வைத்து பொலி கண்டி கிழக்கு சமூக அபிவிருத்திச் சபையிடம் கையளித்தார்.

இவ் வீட்டுத் திட்டத்திற்காக ஒரு கோடியே 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதென்றும் - மொத்தமாக 2 கோடி ரூபா வழங்கப்பட உள்ளதாகவும் யு.என்.கபிற்றாஸ் நிறு வனத்தின் சமூக மேம்பாட்டு உத்தி யோகத்தர் தெரிவித்தார். (9-ரி)

# மெல்லக் கற்கும் மாணவருக்காக 'யுனிசெவ்' ஆதரவில் செயற்றிட்டம்

தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் தரம் 10 இல் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் அதற்கான ஆலோசனைகளை வழங்கவும் ஐ.நா.சிறுவர் நிதியம் முன்வந்துள்ளது.

இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலை எதிர்வரும் 5 ஆம் திகதி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. வலிகாமம் [illegible] வலயத்தினூடாக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 10 ஆம் தரத்தில் கணிதம், தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடங்களில் 10 ஆம் தரத்தில் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தி செயற்றிட்டத்தை வெற்றி பெற வைக்கக் கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரை அனுப்பிவைப்பதுடன், இக்கருத்தரங்குகளில் பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்ள வேண்டும் என வலிகாமம் வலய தமிழ் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா அறிவித்துள்ளார். (ஒ-152)

## வீதிகளில் துர்நாற்றம்

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட வீதிகளில் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்தபல வாரங்களாக பருத்தித்துறையின் பல வீதிகளிலும் ஒரே குப்பைகளும் கழிவுநீர் வடிகால்கள் துப்பரவுசெய்யப்படாமையாலும் நாறி மணக்கின்றது. மேற்படி நகர சபைக்கு இதற்கென நான்கு டிரக்டர்கள் அதற்குரிய சாரதிகள், சுத்திகரிப்பு ஊழியர்கள் வசதி என்பன இருந்தும் ஏன் இந்தநிலை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். (70)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# யாழ்.கிழக்கில் குளங்களின் புனரமைப்பு பூர்த்தி நிலையில்

கொழும்புத்துறை, செப்.2

யாழ்.நகர் கிழக்குப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் பல குளங்களின் புனரமைப்பு வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

-நீண்டகாலமாக திருத்தப்படாது தூர்ந்து போயிருந்த குளங்கள் ஆழமாக்கப்பட்டு அணை கட்டப்பட்டுள்ளது.

பால்குளம், மறவன்குளம், ஈச்சமோட்டைக் குளம், வண்ணான் குளம், இலந்தைக்குளம், உப்புக் குளம், அரியாலைக் குளம் என்பன இப் பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன -

இதேவேளை, தற்போது சில குளங்களில் இருந்து எடுக்கப்பட்ட களிமண் உழவு இயந்திரங்கள் மூலம் வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த வாகனங்களின் சுமைப்பெட்டிகள் பின்கதவு இன்றி களி மண்ணுடன் நகரின் பிரதான வீதிகளூடாக செல்கின்றன. அவ்வேளை பின்கதவு அற்ற பகுதியூடாகப் பாரிய மண்கட்டிகள் வீதிகளில் விழுந்து போக்குவரத்திற்குத் தடையாக இருப்பதோடு, விபத்துகளுக்கும் ஏதுவாக உள்ளன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து மிகுந்த சனநெரிசலான வீதிகளில் திடீரென பாரிய மண்கட்டிகள் விழுவதால் பின்னே செல்லும் வாகன ஓட்டிகள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

'பின்கதவை பொருத்தி சுமை ஏற்றிச் செல்வது அனைவருக்கும் பாதுகாப்பானது எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (9-30)



பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களுக்கான கைவினைப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பனம் பொருள் உற்பத்தி பயிற்சி முடிவில் அவர்களுக்கான விற்பனை நிலையம் அண்மையில் மந்திகை தெருமுடிமடத்தடியில் திறந்து வைக்கப்பட்டது. விற்பனை நிலையத்தினை வடமராட்சியைச் சேர்ந்த பண்பாட்டு உயிர்ப்பூக்குநர் ந.மாலினி நாடாவை வெட்டித் திறந்து வைப்பதனை படத்தில் காணலாம்.

# சேக்கிழார் மாநாடு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்திய சேக்கிழார் மாநாடு போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.போட்டி முடிவுகள் வருமாறு:-

**பேச்சு**

கீழ்ப்பிரிவு:- சி.சோபிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மோ.மைதிலி (வட்டு. மத்திய கல்லூரி).

மேற்பிரிவு:- தெ.ரேக்கா (மல்லாகம் ம.வித்தி), க.சுதாஸ்கரன் (மீசாலை வீரசிங்கம் ம.வித்தி)

**பண்ணிசை**

கீழ்ப்பிரிவு:- சே.சோபிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சி.ரஜித் (உடுவில் முருகமூர்த்தி வித்தி.).

மத்திய பிரிவு:- அ.அமிர்தசிந்துஜன்

மேற்பிரிவு:- கி.வாசுகி (மானிப்பாய் ம.க.), ஜெ.வைஸ்ணவி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி).

**நாடகம்**

மீசாலை இந்து இளைஞர் மன்ற ஆரம்ப அறநெறிப் பாடசாலை, வடமராட்சி உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை.

**சைவ சமய**

**பொது அறிவுப் போட்டி**

ப.ஜங்கரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கஸ்தூரி (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ச.ஜனனி (கொ[illegible]குவில் இந்துக் கல்லூரி)

(202-204)

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,செப்.2

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கந்தபுராணம் என்னும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார்.

அதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு 'சூரசங்காரம்' பற்றி உரை நிகழ்த்துவார். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவன் பாலஷண்முகனின் சிறப்புச் சொற்பொழிவு நாளை 3ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் தி.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், 'ஆலய வழிபாடு' என்னும் பொருளில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (204-202)

* * *

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 24ஆம் நாள் தேர்த்திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை எ.கே.கருணாகரனின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

வயலின் சியாமளாங்கி கருணாகரன், மிருதங்கம் டானியல் வரதராஜன், கெஞ்சிரா கே.அனந்தகோபன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர் (202)



# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் எஞ்சிய பகுதியினரின் பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

ச/ 6813 திருமதி. சிவஞானம் தேருர்ராஜா
ச/ 6847 திருமதி. மீனாட்சி முருகேசு
ச/ 6853 திருமதி. புவனேஸ்வரி சுப்பிரமணியம்
ச/ 6854 திருமதி. தெய்வநாயகி கனகநாயகம்
ச/ 6862 திருமதி. நாகரத்தினம் முருகேசு
முழங்காலுக்கு மேல் செயற்கை அவயம் பொருத்திய ஆண்கள்:- முருகேசு. பொன்னுத்துரை, அப்பாத்துரை குணசிங்கம்.(203-190)

## பருத்தித்துறை கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# மனோகரா 6 விக்கெட்டுக்களால் வெற்றி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் ஓர் ஆட்டத்தில் மனோகரா வி.க. ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

மனோகரா வி.க. அணிக்கும் மைக்கல் (ஏ) வி.க. அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது.

வேணிகாணன் 22 ஓட்டங்களையும், பிரபாகரன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ராஜேஸ் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அனோஜன் 15 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மனோகரா வி.க.அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜேஸ் ஆட்டம் இழக்காமல் 64 ஓட்டங்களையும் பாலதரன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். (3-190)

# கொலின்ஸ் ஞானம்ஸை வென்றது

இந்தச் சுற்றுப் போட்டியின் ஞானம்ஸ் வி.க.அணிக்கும் கொலின்ஸ் வி.க.அணிக்கும் இடையிலான மற்றொரு ஆட்டத்தில் கொலின்ஸ் வி.க.அணி 3 விக்கெட்டுக் களால் பெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் வி.கஅணி 9விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப்பெற்றது.

கீதன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் துஸ்யந்தன் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகக் பெற்றுக் கொடுத்தனர்.

யாதவன் 20 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் சிவரூபன் 14 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் வி.க.அணி 7விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

முரளி, சிவரூபன், குலராஜ் ஆகியோர் முறையே 21, 41,20 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

துஷ்யந்தன் 23ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ரவிகாந் 34 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் பிரதீபன் 23 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தச் சுற்றுப் போட்டியில் மற்றோர் ஆட்டத்தில் நவசக்தி வி.கவை எதிர்த்து நாவலர் வி.க. அணி மோதியது.

நவசத்தி வி.க.21 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மைதானத்தை விட்டு வெளியேறியதால் நாவலர் வி.க அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (3-190)




# முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அளம்பில் முன்பள்ளி முதலிடம்

புதுக்குடியிருப்பு,செப்.2

முல்லைத்தீவுப் பிரதேச முன்பள்ளிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில் அளம்பில் அன்னை வேளாங்கன்னி முன்பள்ளி முதலிடத்தைப் பெற்றது.

இரண்டாம் இடத்தைக் கள்ளப்பாடு முகிலன் முன்பள்ளியும் மூன்றாம் இடத்தை வேனாசீர் முன்பள்ளி, ஜே.ஆர்.எஸ்.முன்பள்ளி ஆகியனவும் பெற்றுக்கொண்டன.

போட்டிகள் முல்லைத்தீவுப் பிரதேச முன்பள்ளி மேம்பாட்டு நிலையத் தலைவர் எஸ். சுரேஸ் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில், மங்கள விளக்கினை முல்லைத்தீவுப் பிரதேச பங்குத்தந்தை ஜெம்ஸ் பத்திநாதன், முல்லைத்தீவு பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தே.சுரேஸ், உளவளத் துணையாளர் மஞ்சு ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை ஈழநாதம், புலிகளின்குரல் செய்தியாளரும், மாவீரர் திலீபனாவின் சகோதரியுமான ச.சகிலா ஏற்றினார்.

தொடர்ந்து சிறார்களின் விளையாட்டுகள், இசையும் அசைவும் என்பன இடம்பெற்றன. (3-353-204)

# இந்திய வீராங்கனை சாதனை



அமெரிக்க பகிரங்க டென்னிஸ் வரலாற்றில் வெற்றி பெறும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்தார் சானியா மிர்சா. அழகான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க டெனிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, அமெரிக்காவின் 19 வயதான மஷோனா வாஷிங்டனை சந்தித்தார். உலக தரப்பட்டியலில் 42வது இடத்துக்கு முன்னேறிய உற்சாகத்தில் களமிறங்கினார் 18 வயதான சானியா.

இருவருமே இளம் வீராங்கனைகள் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக அமைந்தது. இதில் சானியா 7-6, 6-7, 6-4 என்ற செட்களில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றார். இதன் மூலம் அமெரிக்க பகிரங்க டெனிசில் வெற்றியை பதிவு செய்யும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையும் படைத்தார்.

# சர்வதேச கிரிக்கெட் விருதுகள்

சர்வதேச கிரிக்கெட்டில் மிக உயரிய விருதாக மதிக்கப்படுவது ஐ.சி.சி., விருதுகள். சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சிறந்த வீரர் (ஒரு நாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டி என இரு பிரிவுகளில்) சிறந்த அணி, ஆண்டின் தலைசிறந்த வீரர், சிறந்த வளரும் நட்சத்திரம் எனப் பல்வேறு பிரிவுகளின் கீழ் கடந்த ஆண்டு முதல் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கிறது.

2005ம் ஆண்டுக்கான விருது வீரர்களைத் தேர்வு செய்யக் குழு அமைத்துள்ளது ஐ.சி.சி., 2004, ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் கடந்த ஜூலை 31ஆம் திகதி வரையில் வீரர்களின் செயற்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த ஆண்டுக்கான விருதுகள் ஒக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அறிவிக்கப்படுகின்றன. தனிநபர் விருதுக்கான தேர்வுக்குழுவில் டெஸ்ட் அணிகளின் தலைவர்கள், கிரிக்கெட் நிர்வாகிகள், முன்னாள் வீரர்கள் மற்றும் ஊடக நிபுணர்கள் இடம் பெறுகின்றனர். சிறந்த அணியை ஐ.சி.சி., உறுப்பினர்கள் தேர்வு செய்து அறிவிப்பார்கள்.

வளரும் இளம் வீரர் விருதுக்கான தகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுக்கான போட்டியில் உள்ள வீரர், 2004 ஓகஸ்ட் முதலாம் திகதியன்று 26 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும். இதே திகதியன்று, ஐந்து டெஸ்ட் (மற்றும்/அல்லது) 10 ஒரு நாள் போட்டிகளுக்கு மேல் விளையாடியவராக இருத்தல் கூடாது. இந்தத் தகவலை, ஐ.சி.சி., நிர்வாகிகள் துபாயில் வெளியிட்டுள்ளனர்.

**A/L பௌதிகவியல்,**
**இணைந்த கணிதம் வகுப்புகள்**

பல வருடங்களாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக 20 வருட A/L வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். M.C.Q. இற்கான விளக்க விடைகளுடன் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். பயிற்சிகள் வழங்கி திருத்திக் கொடுக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது.

R.பாலசுப்பிரமணியம்
B.Sc.(Cey)Dip.in Ed.
17/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:077 - 6648751
(39524)(32-14-19)

# தென்மராட்சிப் பகுதியில் விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை உயர்வு

தென்மராட்சிப் பிரதேசத்தில் விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

கடந்த செவ்வாயன்று நண்பகல் வரை விசர் நாய்களினால் கடியுண்ட நிலையில் 81பேர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளிவிவரங்கள் மூலம் அறிய முடிந்தது.

கச்சாய் தெற்கில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 7பேர் உட்பட 13பேர் விசர்நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். கச்சாய் தெற்கைச் சேர்ந்த எஸ்.குபேந்திரநாதன் (வயது 40) இவரது பிள்ளைகளான கு.நித்தியானந்தம் (வயது 17), கு.தேனுஜா (வயது 7), கு.பிரியந்தன் (வயது 5), கந்தையாதயாபரன்(வயது 40) இவரது பிள்ளைகளான த.கபிநயன் (வயது 7), த.அரவிந்தா (வயது 4) -

மற்றும் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் ஜெயகௌரி (வயது 34) மீசாலை மேற்கு என்.மயூலதா, பெரிய அரசடியைச் சேர்ந்த என்.யதுசியன் (வயது 7), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இராஜலிங்கம் சுதர்ஸன் (வயது 20), மறவன்புலோவைச் சேர்ந்த வாரி அமிர்தலிங்கம் (வயது 45), நுணாவில் மேற்கைச் சேர்ந்த சந்திரன் சாந்தகுமாரி (வயது 46) ஆகியோரே விசர்நாய்களினால் கடியுண்டவர்களாவர். (எ-117)

## வாழ்வியல் பயிற்சி

சாவகச்சேரி ஜே.ஆர்.எஸ். தொழில் பயிற்சி நிறுவனம் பெண்களுக்கான இலவச வாழ்வியல் பயிற்சிச ா வழங்கவுள்ளது.

தையல், பூவேலை, ஐசிங், சிகை அலங்கரிப்பு, பன்னவேலை, வர்ண வேலை, உளவியல், ஆங்கிலம், தலைமைத்துவம் ஆகியவற்றுக்கான பயிற்சிகள் இதில் அடங்கும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இப்பயிற்சி நெறி வார நாள்களில் காலை 9 மணி தொடக்கம், பிற்பகல் 3 மணிவரை நடைபெறும்.

பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும 10 ஆம் திகதிக்கு முன்னர் புனித லிகோரியார் ஆலயம், கச்சாய் வீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-202)

ஆறுமுக வேலவனே! அறுகோணத் தேரில் வருக! வருக!
அடியவர்களுக்கு அருள்மழை பொழிக! பொழிக!

**அன்பான பெருமக்களே!**

- விவசாய உபகரணங்கள்
- கெனடி, ராஜா, அமுதா பிரான்ட் டீசல் என்ஜின்கள் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்.
- அரிசி, மிளகாய், கோப்பி, மருந்து அரைக்கும் இயந்திரங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- அலுவலக உபகரணங்கள்
- தரஉள்ளீட்டுப் பொருள்கள்
- மூலதனப் பொருள்கள்
- அழிபொருள்கள்
- வாத்தியக் கருவிகள்
- விளையாட்டுப் பொருள்கள்
- அலுவலக அலுமாரிகள், கோவை (File) அலுமாரிகள்
- மேசைகள், புத்தகறாக்கைகள்
- றோணியோ இயந்திரங்கள்
- தட்டச்சு இயந்திரங்கள்

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்**
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 2938.
(C/47692)(50)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி செல்வரட்ணம் கண்மணி

மலர்வு 03- 12 - 1945
உதிர்வு 03- 08 - 2005

பாசத்தோடு நீயிருந்தாயம்மா
நேசம் காட்டி உறவுகளை அணைத்தாயம்மா
எங்கள் உறவுகளை விட்டுப்பிரிய
உனக்கென்ன அவசரம் அம்மா?
கேட்கும் ஓசை எல்லாம் உனது ஓசை போல்
உணருகிறோம் அம்மா!
உன்னைக்காணாது கண்கள் உறங்க மறுக்குதம்மா
இரண்டுநாள் படுக்கையிலே காலனவன் கண்
வைத்தானோ?

ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!

இன்று (02.09.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

பொ.செல்வரட்ணம் (கணவர்)
கே.கே.எஸ்.றோட்,
கோண்டாவில்.
(39527)(32-14-19)

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தக தகவென இரதம் ஏறி வேலவா வருக! தரணியில் போர் ஓய வேலா! அருள்க!

**பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!**
**நாடுங்கள்........**

- பாடசாலை, பல்கலைக்கழகப் பாடப் புத்தகங்கள்
- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- தர உள்ளீட்டுப் பொருள்கள், மூலதனப் பொருள்கள்
- தொலைநோக்கிக் கருவிகள் (வானியல்)
- வாத்தியக் கருவிகள்
- அழிபொருள்கள்
- நுணுக்குக் காட்டிகள்
- கணனி நூல்கள்
- விளையாட்டுப் பொருள்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள்
- அலுவலக அலுமாரிகள், புத்தக இறாக்கைகள்
- O.H.P. புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்
- மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள்
- அறிவமுது, அந்திவானம் பதிப்புகளின் பதிப்புகள், வெளியீடுகள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:

(C/44693)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P 0212225542

# காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு ஹுரிய தலைவருக்கு மன்மோகன் அழைப்பு

## செப்ரெம்பர் 5 ஆம் திகதி டில்லியில் பேச்சுக்கள்



புதுடில்லி,செப்.2

காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேசத் தனிநாடு கோரும் ஹுரியத் அமைப்பின் தலைவர் மிர்வாயிஸ் உமர் பரூக் மற்றும் இதர தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அழைப்புவிடுத்துள்ளார்.

இதன்படி செப்ரெம்பர் 5 ஆம் திகதி டில்லியில் ஹுரியத் தலைவர்களுடன் பிரதமர் மன்மோகன் பேச்சுநடத்துவார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கும் ஹுரியத் தலைவர்களுக்கும் இடையே இத்தகைய பேச்சு நடக்கவிருப்பது இதுவே முதல்முறை.

இத்தகவலைப் பிரதமரின் செய்தித் தொடர்பாளர் சஞ்சய் பாரு டில்லியில் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

நியூயோர்க்கில் செப்ரெம்பர் 14 ஆம் திகதி பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பைப் பிரதமர் மன்மோகன் சந்திக்கவுள்ளார். இந்நிலையில் ஹுரியத் தலைவர்களை சந்தித்துப்பேச மன்மோகன் முடிவு செய்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

வன்முறைப் பாதையில் இருந்து விலகிவரும் எத்தகைய அமைப்புடனும் பேசத் தயாராக இருப்பதாக மன்மோகன் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதன்படி ஹுரியத் தலைவர்களுடன் அவர் பேசவிருக்கிறார்.

காஷ்மீரில் உள்ள பல்வேறு தலைவர்களுடனும் இந்தியப் பிரதமரின் அலுவலகம் அவ்வப்போது தொடர்புகொண்டுவருகிறது.

முன்னதாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதிகளுக்கு 15 நாள்கள் சுற்றுப்பயணம் செய்த ஹுரியத் தலைவர்கள் மன்மோகனுடன் தாங்கள் பேச விரும்புவதாகத் தெரிவித்திருந்தனர்.

காஷ்மீர் குறித்துப் பிரதமர் மன்மோகன் அழைப்பு விடுத்துள்ள நிலையில், ஸ்ரீநகரில் ஹுரிய மாநாட்டு அமைப்பினர் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

மன்மோகனுடன் நடத்தவுள்ள பேச்சு விவரங்கள் குறித்து ஹுரியத் தலைவர்கள் விவாதித்தனர். (ச)

# பாகிஸ்தானில் 2007 இல் தேர்தல்

இஸ்லாமாபாத் ,செப்.2

பாகிஸ்தானில் 2007 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறும் என தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது கடந்த 30 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் அறிவித்தார்.

தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது இது பற்றி இஸ்லாமாபாத்தில் நிருபர்களிடம் கூறுகையில், 'பாகிஸ்தானில் 2007 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறும். அதுவரை நாட்டின் அதிபராக பர்வேஷ் முஷாரப் இருப்பார்.

எதிர்க்கட்சிகள் தேர்தலில் பங்குகொள்ளும் என நம்புகிறேன். முத்தாகிதா மஜ்லிஸ் - இ - அமால் அமைப்பிற்கு எதிராக அரச சதிவேலைகளில் ஈடுபடுவதாகக் கூறுவதை ஏற்க முடியாது' - என்றார். (8)

# சீனாவில் தொடர் மழை இதுவரை 1024 பேர் பலி!

பீஜிங்,செப்.2

சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்யும் பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் இதுவரை ஆயிரத்து 24 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதியிலிருந்து சீனாவில் இடைவிடாமல் பலத்த மழை பெய்து வருகிறது. ஆண்டுதோறும் கோடை காலத்தில் பெய்யும் மழை இந்த ஆண்டு மிகவும் கடுமையாகப் பெய்துவருகிறது. இதனால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மத்திய சீனாவில் வெள்ளத்தில் மூழ்கி இதுவரை 28 பேர் பலியாகியுள்ளனர்.

ஏராளமான வீடுகளில் வெள்ளம் புகுந்தது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், மத்திய சீனப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஒரு லட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கடந்த மாதம் 14 ஆம் திகதியிலிருந்து இதுவரை வெள்ளத்தில் சிக்கி 1024 பேர் பலியாகி இருப்பதாகவும் 240 கோடி ரூபா மதிப்புள்ள பொருள்கள் சேதமடைந்திருப்பதாகவும் சீன நாட்டு உள்விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது. (8)

# அமெரிக்க நியூ ஓர்லியன்ஸ் நகரை அலங்கோலமாக்கியது 'கத்தரீனா'

அமெரிக்காவின் கடற்கரையோர மாநிலங்களைப் புரட்டிப் போட்ட 'கத்தரீனா' சூறாவளியால் நியூ ஓர்லியன்ஸ் நகரமே தண்ணீரில் மூழ்கிவிட்டது. மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஏழு லட்சம் மக்கள் தவித்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான திருடர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அனைத்தையும் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

## உலக அரங்கில்

அமெரிக்காவில் கடற்கரையோர மாநிலங்களான மிசிசிபி, லூசியானா, அலபாமா ஆகிய மாநிலங்களில் சில நாள்களுக்கு முன் 'கத்தரீனா' என்ற பயங்கரச் சூறாவளி வீசியது.

அமெரிக்காவில் நியூ ஓர்லியன்ஸ் என்ற நகரம் கடல் மட்டத்தை விட தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. இந்த நகரம் சூறாவளி வீசினால் பாதிக்கப்படும் என முன்பே கணித்து வைத்திருந்தனர். அதேபோல் 230 கி.மீ. வேகத்தில் கத்தரீனா சூறாவளி சுழன்று வீசியதில் நியூ ஓர்லியன்ஸ் நகரம் சின்னாபின்னமாகிவிட்டது. இந்த நகரத்தின் 80 சதவீத பகுதி நீரில் மூழ்கிவிட்டதாக நகர மேயர் தெரிவித்துள்ளார். பல இடங்களில் 20 அடி உயரத்துக்குத் தண்ணீர் உட்புகுந்துள்ளது.

இந்த நகரத்தில் ஏழு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 90 சதவீதம் பேர் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர் புஷ் விடுமுறையை அனுபவிப்பதற்காக டெக்சாஸ் பகுதிக்குச் சென்றிருந்தார். கத்தரீனா சூறாவளித் தாக்குதலைக் கேள்விப்பட்டதும் விடுமுறையை ரத்துச்செய்துவிட்டு அவர் தலைநகருக்குத் திரும்பியுள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி வேகமாக நடக்கிறதா என்பதை அவர் கண்காணித்து வருகிறார். (8)

# பிஜி நாட்டில் தேர்தல் நெருங்குவதால் இன மோதல்கள் வெடிக்கும் அபாயம்!

சவா,செப்.2

இந்திய வம்சாவளியினர் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் பிஜி நாட்டில் இன மோதல்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அந்நாட்டு நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. மீண்டும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்றுவிடக்கூடும் என்பதால் பூர்விகக் குடிகள் இப்போதிலிருந்தே இந்தியர்களுக்கு எதிராக விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

அங்கு விவசாயம்,தொழில்துறை மட்டுமன்றி அரசியலிலும் செல்வாக்குப் பெற்றனர். மகேந்திர சௌத்ரி என்ற இந்திய வம்சத்தவர் அந்நாட்டின் பிரதமராக 1998இல் தேர்தல் மூலம் பதவிக்கு வந்தார். இதைத் தாங்கிக்கொள்ள முடியாத ஜார்ஜ் ஸ்பைட் என்ற தொழிலதிபர், 1999 இல் சௌத்ரி பதவிக்கு வந்து ஓராண்டு ஆனதைக் கொண்டாடியபோது இராணுவம், பொலீஸ் ஆகியவற்றின் உதவியுடன் மகேந்திர சௌத்ரியையும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் துப்பாக்கி முனையில் சிறைப்பிடித்தார். மகேந்திர சௌத்ரியைப் பதவியிலிருந்து அகற்றினார்.

பிறகு சமரச ஏற்பாடாக பூர்விக குடியைச் சேர்ந்தவர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆனால், இந்தியர்கள் பிரதமர் பதவிக்கு வர முடியாதபடி அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

மகேந்திர சௌத்ரி என்ற இந்தியரைப் பதவியிலிருந்து அகற்ற திடீர் இராணுவப் புரட்சியை நடத்தியவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று இப்போதைய அதிபர் அறிவித்திருப்பதால் இந்திய வம்சாவளியினரிடையே மனக்கொதிப்பு ஏற்பட்டு வருகிறது. இது தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று தெரிகிறது.

# இந்தியா, பாக். சிறைகளில் வாடும் கைதிகளுக்கு விரைவில் விடுதலை

புதுடில்லி,செப்.2

'இரு நாட்டுச் சிறைகளிலும் தண்டனை காலம் முடிந்த பின்னரும் சிறைவாசம் அனுபவித்து வரும் மீனவர்கள் மற்றும் சாதாரண கைதிகளை விடுவிப்பது' என இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்துறை செயலர்கள் மட்டத்திலான பேச்சில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் உள்துறை செயலர்கள் கூட்டம் டில்லியில் கடந்த இரண்டு நாள்களாக நடந்து நேற்றுமுன்தினம் முடிவடைந்தது. இந்திய தரப்பில் உள்துறை செயலர் வி.கே. துகாலும், பாக்., தரப்பில் சையது கமால் ஷாவும் பங்கேற்றனர். பின்னர் கூட்டறிக்கை ஒன்றை வி.கே.துகால் வெளியிட்டார்.

அதன்படி, இரு நாட்டுச் சிறைகளிலும், தண்டனைக் காலம் முடிந்த பின்னரும் சிறைவாசம் அனுபவித்து வரும் மீனவர்கள் மற்றும் சாதாரண கைதிகளை விடுப்பது, அதற்கு முன் அந்தக் கைதிகள் இந்தியா, பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களா என்பது உறுதிசெய்யப்படும். அதன் பின் அடுத்த மாதம் 12ஆம் திகதி அவர்கள் விடுவிக்கப்படுவர். இருநாட்டு சிறைகளில் உள்ள கைதிகள் குறித்து கடந்த ஆண்டு டிசெம்பரில் இரு நாட்டு வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர, இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலை வெளியிடுவது, சிறையில் உள்ள கைதிகளை அவர்கள் கைது செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட தூதரக அதிகாரிகள் பார்க்க அனுமதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டறிக்கை வெளியிட்டபோது, பாக்., உள்துறை செயலர் சையது கமால் ஷாவும் உடனிருந்தார். கூட்டறிக்கையை முழுவதும் ஏற்பதாகத் தெரிவித்தார்.

இரு நாட்டு உள்துறை செயலர்கள் பங்கேற்ற கூட்டத்தில் மேலும் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையே நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து நடக்கும் பேச்சில் முன்னேற்றம் ஏற்பட புதிய முறையைக் கையாள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இரு நாட்டு வெளியுறவுச் செயலர்கள் இஸ்லாமாபாத்தில் பேச்சு நடத்துகின்றனர். நியூயோர்க்கில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும், பாக். அதிபர் முஷாரப்பும் சந்தித்துப் பேசினர். அவர்கள் பேசவேண்டிய விடயங்கள் குறித்து இரு நாட்டு வெளியுறவுச் செயலர்களும் முடிவு செய்யவுள்ளனர்.

இதற்காக வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் நேற்று இஸ்லாமாபாத் சென்றார். அங்கு அவர் பாக்., வெளியுறவுச் செயலர் ரியாஸ் முகமது கானுடன் மூன்று நாள்கள் பேச்சு நடத்தவுள்ளார்.



*விடுதலை செய்யப்படுவதற்கு முன் இந்தோனேசிய அசே மாகாண போராளிகளுக்குச் சிறை அதிகாரி மரிடி விடுதலைப் பத்திரங்களைக் கையளிக்கிறார். இந்தோனேசிய அரசுக்கும் அசே விடுதலைப் போராட்ட இயக்கத்துக்குமிடையில் கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து இரண்டாயிரம் கைதிகளுக்கு ஜனாதிபதி யுதோயுனோ பொதுமன்னிப்பு அளித்துள்ளார். வெளிநாட்டில் வாழும் போராளிகளும் திரும்பி வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

மார்க்கோனியின் மின்சாதன பாதுகாப்புக கையேடு

120 வீட்டு மின்சாதனங்கள்
மின் உதவிச்சாதனங்கள்
மின்விரய குறிப்புகள்
மின் அருஞ்சொற்கள்
வீட்டு மின்னியல்
மின்தாக்க முதலுதவி
பாவனையாளருக்குரிய
மின் அலகுகள்,குறியீடுகள்

நேரடி விலை 230/=

இலங்கையில் முதல் முதலாக ஓர் புதிய பரிமாணத்தில் அனைவர் வீட்டிலும் இருக்கவேண்டிய பாவனையாளருக்குரிய மின்சாதன பாதுகாப்புக் கையேடு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை புத்தகக் கடைகளில் பெறலாம். கடைகளில் பெறமுடியாதவர்கள், இதனை உறுதியான பதிவுப்பார்சல் மூலம் விரைவாகப் பெறுவதற்கு 260 ரூபா மணிஓடரை பதிவுத்தபால் மூலம் எமது முகவரிக்கு அனுப்பவேண்டும்.

அனுப்பவேண்டிய தபாற்கந்தோர் - Wellawatta.
பெறுபவரின் பெயர்:-Manager, Marconi Technical Institute.

MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112 361362



**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் சுரேஸ்கோபி

**பத்ரம்**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)

(அ-43880)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(அ-43363)

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேனுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

**தாஸ்**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,

அடுத்த வெளியீடு: சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

(அ-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த

**அந்நியன்** (ரீல்ஸ்)

(டோல்பி ஒலியமைப்பு)

காட்சிகள்:

11.00, 3.00, 7.00 (பு.நே.).

IIS

**கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

10.09.2005 }
14.09.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குநர்
IIS யாழ்ப்பாணம்.

# நல்லை ஆதீனத்தில் இன்றும் நாளையும் இசை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப்.2

நல்லூர் கந்தசாமி கோயில் இரதோற்சவ, தீர்த்தோற்சவ விழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இசை நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

தினமும் காலை 9 மணி தொடக்கம் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறும் இவ் இசை நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை ஆதீன இசை வகுப்பு மாணவர்களின் குழுப் பாடல் இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக வயலின் - எஸ்.அசோக்குமார், மிருதங்கம் - எ.செல்வரத்தினம் ஆகியோர் பங்கேற்பர்.

தொடர்ந்து இடம்பெறும் இசை நிகழ்வுகளில் வி.பரமசாமியின் பாட்டுக்கு வயலின் -எ.ஜெயராமன், மிருதங்கம் - கே.அனந்தகோபன், கெஞ்சிரா - ரி.சண்முகசுந்தரம் ஆகியோரும் -

சியாமளாங்கி கருணாகரனின் பாட்டுக்கு வயலின் - வ.மதுரா, மிருதங்கம் - வி.ரமணன் ஆகியோரும் -

குணபூஷனம் நாகராசாவின் பாட்டுக்கு வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கடம் - எ.செல்வரத்தினம் ஆகியோரும் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

மதுரா வரதாஜ சர்மாவின் பாட்டுக்கு வயலின் - எஸ்.அசோக்குமார், மிருதங்கம் - எஸ்.வரதராஜசர்மா, கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோரும் -

எஸ்.நாகராசாவின் பாட்டுக்கு வயலின் - எஸ்.ஜெயராமன், மிருதங்கம் - கே.அனந்தகோபன் ஆகியோரும் -

திவ்யமணி மகாலிங்கத்தின் பாட்டுக்கு வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம் - எம். லோகேந்திரன் ஆகியோரும் -

பார்வதி சிவபாதத்தின் பாட்டுக்கு ஹார்மோனியம் - யோன்.கவாஸ்கர் மிருதங்கம் -சதாவேல்மாறன், தபேலா- எஸ்.விமல்சங்கர் ஆகியோரும் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

தொடர்ந்து சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் வில்லுப் பாட்டு இடம்பெறும். (எ-202)

## தேங்காய் வீழ்ந்து இருவருக்குக் காயம்!

தென்மராட்சி, செப்.2

தேங்காய் தலையில் வீழ்ந்து இரு பெண்கள் காயமடைந்தனர்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த அனோஜன் பவானி (வயது 20) கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த இராசையா சரஸ்வதி (வயது 49) ஆகியோரே காயமடைந்தவராவார்கள்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஓ-117)

## *மரத்திலிருந்து வீழ்ந்து சிறுமி காயம்!*

தென்மராட்சி, செப்.2

நாவல்பழம் பறிக்க மரத்தில் ஏறிய சிறுமி தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலை தெற்கில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நந்தகுமார் நவனீலனி (வயது 13) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-117)

Sri Lankan - German Develpoment Cooperation

Ministry of Relief, Rehabilitation & Recognizations

NRP
Northern Rehabilitation Project

kfw gtz German Technical Cooperation

## பொறியியலாளர்கள் / ஒப்பந்தகாரர்களுக்கான அழைப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் புனரமைப்பு வேலைகளுக்கான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயாரிப்பதிலும், வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்று நிறைவேற்றுவதிலும், சேவைகளை வழங்கக்கூடிய பொறியியலாளர்கள்/ஒப்பந்தக்காரர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு வருகைதருமாறு அன்புடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

காலம் : 06.09.2005 செவ்வாய்க்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி.
இடம் : ஜி.ரி.இசற். வில்லியம் ஹாவே நிலையம், இல.17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

472, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
01.09.2005

சிரேஸ்ட ஆலோசகர்,
ஜி.ரி.இசற். வடபுனரமைப்புத் திட்டம்.

## INVITATION TO CIVIL ENGINEERS AND CONTRACTORS

Invitation is hereby extended for a meeting with civil engineers and contractors who can provide services in the preparation of plans and BOQ for the structures and roads to be constructed in the Tsunami affected villages of Jaffna District.

Your participation is earnestly solicited.

Date : 06th September, 2005 Tuesday
Time : 10.00 am
Venue : GTZ - William Harvey Centre, No. 17, Kandy Road, Jaffna

472, Main Street,
Jaffna.
01.09.2005.

Senior Advisor
GTZ -NRP

**31.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200563904 இலிருந்து 200581971 வரை

சீட்டிழுப்பு இல. 1637

வெற்றி எண்கள்

06 29 32 37 சுப்பர் எண் 08

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.45,76,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 45,76,450/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 480 | 1,000/- | 4,80,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,529 | 500/- | 7,64,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,242 | 40/- | 9,29,680/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,977 | 20/- | 4,39,540/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,30,692 | 10/- | 33,06,920/- |
| | | மொத்தம் | 80,70,640/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 85,70,640/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 54,59,650/-

தொடர் இல. 300540903 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 03 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| நுவரெலியா | 200567561-1-13 |
| திருகோணமலை | 200568407-9-20 |
| மட்டக்களப்பு | 200568246-5-28 |
| புத்தளம் | 200576563-0-16 |
| மாத்தளை | 200572392-8-81 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செனற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

குவலயத்தில் 19 - 12 - 1949

குகமயத்தில் 03 - 08 - 2005



### அமரர் நடேசன் வசந்தகுமார்

(உதவி அத்தியட்சகர், சுங்கத் திணைக்களம்)

*எமது குடும்பத் தலைவனின் அகாலமரணத்தை அறிந்து உடன் வந்து தோளோடு தோள் நின்று உதவிக்கரம் நீட்டிய சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக முகாமைத்துவபீட மாணவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் நேரில்வந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

இன்று (02.09.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

36/3, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குழி. (39535)(25-45-18)

மனைவி, மக்கள்,
சகோதரங்கள்,
து.சோமசுந்தரம் (மைத்துனன்).

## மரண அறிவித்தல்

### *செல்வி சுப்பிரமணியம் செல்வராணி*

இருபாலை, விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுப்பிரமணியம் செல்வராணி நேற்று (01.09.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் (பொலீஸ் மணியம்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் பரமானந்தம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, நித்தியானந்தன் மற்றும் விஜியராணி, சிவானந்தன் (இத்தாலி), கிருபானந்தன் (ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்), விவேகானந்தன் (ஆசிரியர், யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை), கருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சண்முகராசா (யாழ்ப்பாணம்), செல்வராணி (ஜேர்மனி), ராஜேஸ்வரி, மதிவதனி (இத்தாலி), தாரணி (பட்டு), புஸ்பமலர், பூலோகறஞ்சிதம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரவீனா, கௌசிகா, திவ்வியா, மேனகா, விசாகன், சியாமளன், மைத்திரேஜி, கஜகர்ணன், விதூஷன், நிதூஷன், சௌமியா ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி இளையதம்பி மனோன்மணி (கனடா) அவர்களின் அன்பு மருமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2005) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.H.லேன், இருபாலை,
கோப்பாய். (39540) (25-45-34)

தகவல்:
சு.சிவானந்தன் (சகோதரன்).

## சோதி வேம்படி வித்தியாலயம் மானிப்பாய் இந்துவில் இயங்கும்

வலி.தென்மேற்கு, செப்.2

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் புதிய மாடிக் கட்டடப் பணிகள் இவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு இங்குள்ள பழைமைவாய்ந்த கட்டடத்தின் ஒரு பகுதி அகற்றப்பட்டுள் ளது. புதிதாக நிறுவப்பட்டுள்ள மாடிக்கட்டடத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் காலம்வரை இவ் வித்தியாலயம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உள்ள கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கவுள்ளது என்று வித்தியாலய அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை தெரிவித்தார்.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் இந்த மாடிக் கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
A/L சேதன இரசாயனம்
ORGANIC
ஆசிரியர்
N.மகேஸ்வரன்
ஆரம்பம்:-3/9/2005
சனி: 4.30 pm.
(சி/44890) (45-25-18)

# தாயக நிலத்திலும் கடலிலும் இருந்து படைகள் அகலட்டும் தமிழ் ஈழப்போரை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கட்டும்!

## கிளிநொச்சி எழுச்சிப் பிரகடனத்தில் வலியுறுத்து

கிளிநொச்சி,செப்.2

தமிழர் தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்காப் படைகள் உடனடியாக வெளியேறவேண்டும்.

தமிழர் இறைமைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மாபெரும் எழுச்சி நிகழ்வில் விடுக்கப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பிரகடனத்தின் முழுவிவரம் வருமாறு:-

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தின் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும் ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இலங்கைத்தீவினை ஐரோப்பியர் ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக இருந்து வந்துள்ளோம். 1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையை புகுத்தியபோது தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்ததையும் அதன்பின் 1948 இல் இலங்கையைவிட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது தமிழ் பேசும் மக்களின் இறைமையை எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

- இவ்வாறு சிங்களச் சமூகம் முறையற்ற வகையில் பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம் நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமையும் சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் மொழியுரிமையும் வேலைவாய்ப்புரிமையும் பறிக்கப்பட்டது. கல்வித் தரப்படுத்தல் சட்ட மூலம் கல்வியுரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாத தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாக சிதைக்கப்பட்டது. இவ்வாறாக தமிழ் பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி, இலங்கைத்தீவின் அரசமைப்புக்களுமே இனவாத ஒடுக்குமுறை கருவியாக பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அரசமைப்பில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29 ஆவது பிரிவு, பின்னர் 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிலங்கா சோசலிஷ ஜனநாயக குடியரசு அரசமைப்பு மூலம் நீக்கப்பட்டது. இந்த அரசமைப்பில் பௌத்த மதம், அரசாங்க மதமாக்கப்பட்டு இன ஒடுக்குமுறைக்கான அரசமைப்பு வடிவமாக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது. எனவே, நீதி வழங்கப்படவேண்டிய அரசமைப்பு அநீதியின் உறைவிடமானது.

### மென்முறைப் போராட்டம்

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட நாகரிகமான அரசியல் வழிமுறைகளையும் மென்முறை போராட்ட வடிவங்களையும் கைக்கொண்டது. அவற்றினைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும் பின் அவற்றினை கிழித்தெறிவதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள். 1957 ஆம் ஆண்டு பண்டா- செல்வா ஒப்பந்தத்தையும் 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்குச் சான்றாக வைக்கின்றோம். இவ்வாறாக, மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்டபோது எம் மக்கள் மீது மிக மோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில், 1970 களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ் மக்களின் தற்காப்புக்கும் விடுதலைக்குமான போராட்டத்திற்கு தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

எனவே, அமைதி வழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தலைமைகள் 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டனர். பின்னர், அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தமிழ் மண்ணையும் தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்ததொரு தேசியத் தலைவரையும் ஒரு மரபு வழி போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன் மூலம் இலங்கைத்தீவில் ஒரு தனித் தேசிய இனமாக தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம்.

இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுகளின் போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுகள், எறிகணைவீச்சுகள் ஆகியன பாடசாலைகளிலும் மக்கள் குடியிருப்புகளிலும் வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு எமது மக்கள் பச்சிளம் பாலகர் முதல் முதியோர் வரை கோரமாக பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணில் இருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர். இத்தகைய அரச பயங்கரவாத கொடூரங்களையெல்லாம் 'அரசு' என்ற முகத்திரை கொண்டு சர்வதேச சமூகத்திற்கு முன் சிங்களப் பௌத்த பேரினவாதம் மூடிமறைத்தது. ஆயினும், எமது விடுதலைப் போராட்டம் ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகளைக் குவித்தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்து தேசிய விடுதலைப் போருக்கு தோள் கொடுத்தனர்.

இந்த வரலாற்றுப் போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு என்ற ஒரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்கள், நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

### சர்வதேசத் தலையீடு

இந்நிலையில், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தினால் வெல்லமுடியாது என்பதை சிறிலங்கா அரசு உணர்ந்து கொண்டது. சமகாலத்தில் சர்வதேச சமூகம் இந்த இன முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்துகொண்டது.

வேறுவழியின்றியும் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடுசெய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002 ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனும் கையொப்பமிட்டு ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து ஆறுசுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டன. இப்பேச்சுகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால், நேரடிப் பேச்சுக்கள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைவு முன்வைக்கப்பட்டது. இது பற்றியும் தொடர்ந்து பேச சிறிலங்கா அரசு முன்வராததால் பேச்சு மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப் போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புக்கள் யாவும் பொய்த்துப்போய் விட்டன. சிறிலங்காப் படையினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம் நிறைந்த எமது சொந்த நிலங்களும் செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உலகை உலுக்கிய ஆழிப்பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை என்பதை ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்தது. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப்போயிருக்கும் நெஞ்சுகளை மாற்றமுடியாது என்பதனை உலகம் கண்டுகொண்டுள்ளது.

### தெற்கில் அதிகாரப் போட்டி

இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டுப் பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகாரவர்க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப் பெருக்க நடவடிக்கைகளையும் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள். இவை யாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு இலங்கைத்தீவில் நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்நிலையில், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக்கொள்கிறோம். இந்த உண்மைகளைச் சர்வதேச சமூகம் யுத்தநிறுத்த உடன்படிக்கைக் கால நடவடிக்கைகள் மூலம் புரிந்துகொண்டிருக்கும் என்பதனையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டியவர்களாகச் சிங்களப் பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எனவே, எமது தாய நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் -

எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும்-

அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்டபடியே உள்ளோம் என்பதனையும் -

இந்த எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை, தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழி தாயகம்,தேசிய இனம், தன்னாட்சி என்பனவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்கவேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம்.

(ஐ-எ-த)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சப்பரத் திருவிழா நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் சப்பரத் திருவிழாவைக் காண ஆலயத்தில் திரண்டிருந்தனர். முருகப்பெருமான் வள்ளி ,தெய்வயானை சமேதராய் சப்பரத்தில் உலாவரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

(படம்-பகீரதன்)

# மீட்பு நிதி மீளளிக்கும் விவரம் அறிவிப்பு

கிளிநொச்சி,செப்.2

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்படவுள்ள இடம் மற்றும் நாள் தொடர்பான விவரத்தை விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதன்போது எற்கனவே மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டு அதனைப் பெற்றுக் கொள்ளாதோரும் தமது கடனைப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து மீளளிப்பு நிதியைப் பெறவுள்ளோர் முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான நாள்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து மீளளிப்பைப் பெறவுள்ளோருக்கு உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள நாள்கள் வருமாறு:-

- நல்லூர் - 9ஆம்,10ஆம் திகதிகள்
- யாழ்ப்பாணம் - 11ஆம் திகதி
- கோப்பாய் - 12ஆம் திகதி
- உடுவில் - 13 ஆம் திகதி
- மானிப்பாய் - 14ஆம் திகதி
- தெல்லிப்பழை - 16ஆம் திகதி
- சங்கானை - 17ஆம் திகதி
- கரவெட்டி - 18ஆம் திகதி
- பருத்தித்துறை-வடமராட்சி கிழக்கு- 19ஆம் திகதி
- சாவகச்சேரி-பச்சிலைப்பள்ளி- 20ஆம் திகதி
- வேலணை-காரைநகர்-21ஆம் திகதி

(ஐ-9)

# பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் ,செப்.2

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்கு இன்று நடைபெறவிருந்த செயன்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் எனினும் எழுத்துப் பரீட்சைக்குத் திகதி வழங்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அது திட்டமிட்டபடி இன்று நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(9-13)





## சந்திவெளியில் துக்கம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, சந்திவெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கொழும்பு, கட்டுநாயக்கா பகுதியில் கடத்தப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்றும் நேற்றுமுன்தினமும் சந்திவெளிப் பிரதேசத்தில் தொடர்ந்து துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

சந்திவெளியில் உள்ள வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், பொதுச் சந்தை என்பவற்றில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இளைஞர்களின் படுகொலையைக் கண்டித்து வீதிகளில் பாதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய உறவினர் ஒருவரை அழைத்து வருவதற்காகச் சென்றிருந்த குறித்த இரண்டு இளைஞர்களும் கடந்த சனிக்கிழமை கொழும்பு, கட்டுநாயக்கா பகுதியில் வைத்து வெள்ளைவானில் வந்த இனம்தெரியாதநபர்களினால் கடத்தப்பட்டிருந்தனர். பின்னர் ஞாயிற்றுக்கிழமை களுத்துறை, நாகொட பிரதேசத்தில் இருந்து அவர்களுடைய சடலங்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டன. (ஐ-க)

உதயனின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியின் கொழும்புத் தலைமையகத்தின் மீது கடந்த திங்களன்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்பு ஊழியர் டேவிட் செல்வரத்தினத்தின் இறுதிச்சடங்குகள் நேற்று நடைபெற்றன. உறவினர்கள் கதறி அழுவதையும் பிரதேப் பேழை சுமந்து செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

## ஊடகங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடப்பட்டுள்ள வன்முறைகளை உடன் நிறுத்துமாறும் -

வன்முறையுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் -

இப்போராட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

போராட்டத்தில் கலந்துகொண்ட பலரும் வன்முறைகளைக் கண்டிக்கும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தமது கைகளில் ஏந்தியிருந்தனர். பல்வேறுபட்ட கண்டனக் கோஷங்களையும் எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்த பதாகைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:-

''உண்மைகளைச் சொன்னால் பரிசென்ன அடியும் உதையும் -

இறுதியில் கொலையுமா?'', ''கண்ட இடத்தில் கொல்ல நாங்களென்ன கூலிப் படைகளா?'', ''பத்திரிகையாளர்களைப் பயங்கரவாதி களாக மாற்றாதே!'', ''வீழும்போதும் வித்தாய் வீழ்வோம்!'', ''கொல்லப்பட்ட எங்கள் சகபாடிகளது கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்து!!'', ''துப்பாக்கி முனையிலா உங்கள் ஊடக சுதந்திரம்? சர்வதேசம் சிரிக்கிறது!!'', ''ஊடக சுதந்திரத்தை நசுக்காதே! எங்கள் உதிரத்தைக் குடிக்காதே!!'', ''ஊடக சுதந்திரத்துக்கு ஆப்புவைக்காதே!'', ''இலங்கையில் ஊடக சுதந்திரம் அரசியல்வாதிகளினதும், படை அதிகாரிகளினதும் சட்டைப்பையினுள்ளா?'', ''நிமலை, நடேசனை, சிவராமைக் கொன்றீர்! என்னத்தைக் கண்டீர்?' (ஐ-சு)

**உயர்கல்வி மாணவர்களே!**

நீங்கள் அவசரமாக எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் அழகாக இல்லாமல் / இருக்கலாம்?. நாம் அவற்றை விரைவாக கணினி மூலம் அழகாக வடிவமைத்துத் தருகின்றோம்.

குறிப்பு :- கணினி பதிப்பு மூலம் தலைப்பிட்டு பைண்டிங் செய்தும் தரப்படும்.

ஜய்ராம் JAYRAM PRINTERS பிறின்ரேஸ்

351, மணிக்கூண்டு வீதி,வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0712 569898, 0776 072291

## கிளிநொச்சியில் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளை இலங்கையில் நடத்துவதற்கு அரசு தயாராக உள்ளது. ஆனால், பேச்சுகளை கிளிநொச்சியில் நடத்துவதற்கு அரசாங்கம் தயாரில்லை.

ஓமந்தையில் அல்லது முகமாலையில் பேச்சுகளை நடத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கிறது. ஏற்கனவே, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக் கும் படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பல பேச்சுகள் ஓமந்தையில் நடைபெற்றுள்ளன என்பதால் அதுவே பேச்சுக்கான சிறந்த இடமென்று அரசு கருதுகிறது.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு பற்றி நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துவிட்டோம். எனினும் தற்போது சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பிய வுடன் இது குறித்தான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் கூறினார். (ஐ-க)

## ஒரு லட்சம் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் பல பகுதிகளிலிலும் இருந்து வந்த சுமார் ஒரு லட்சம் மக்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் திரண்டிருந்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் படங்களைத் தாங்கியவாறு அவர் கள் உரத்த குரலில் சுயநிர்ணய கோஷம் எழுப்பினர்.

தங்கள் அபிலாசைகளை வெளிப்படுத்தி ஆர்ப்பரித்தனர்.

எழுச்சிப் பிரகடன மாநாட்டின் தொடக்கத்தில் முதன்மைச் சுடரினை மாவீரர் மேஜர் விமலின் துணைவியார் தமிழ்ச்செல்வி சண்முகநாதன், மாவீரர் மேஜர் கமலின் தந்தை யார் முத்துச்சாமி அருணாசலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் கப்டன் வண்ணனின் தந்தையார் முத்துவேல் சீவரத்தினம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து எழுச்சி அரங்கு ஆரம்பமாகியது. (ஐ-த-7-305-352-301-405)

## நல்லூர் கந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முருகனின் ரதோற்சவம் காண்பதற்காக ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் திரண்டி ருக்கின்றனர்.

ஆலயச் சூழலில் ஒழுங்கைப் பேணவும் நெரிசலைத் தவிர்க்கவும் விரிவான ஏற்பாடுகள் தொண்டு அமைப்புகளால் செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும் மற்றும் பல தனியார் ஒளி, ஒலிபரப்புச் சேவைகளிலும் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் பல ஊடக சேவைகளிலும் தேர்த்திருவிழா சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன.

நாளைகாலைஇடம் பெறும் தீர்தத் திருவிழாவுடன் வருடாந்த பெருந்திருவிழா நிறைவுபெறும். ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழா இடம் பெறும். (ஐ-13)

PC Accessories
PC Peripherals

| | | |
|---|---|---|
| TV Card | Network cards | Head phones |
| Woofers,2.1,4.1,5.1 | Hub/Switch | Cartridges |
| UPS | Memory cards | Ribbons |
| Pen drives | Fax modems | Toners |
| Printers | Capture cards | Refills |
| Combo/DVD Drives | wireless keyboard | Photo quality papers |
| Digital Cameras | wireless mouse | USB hubs |
| Scanners | Home theater sys. | Power supply |

VISIT FOR SPECIAL PRICES
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

**அன்பான வாசகர்களே, விளம்பரதாரர்களே!**

இன்றைய உதயனுடன் இணைக்கப்பட்டுள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலரின் XIV பக்கங்களில் - IX பக்கங்கள் வர்ணத்திலும் V பக்கங்கள் கறுப்பு வெள்ளையிலும் அச்சாகி உள்ளன.

இவற்றின் பக்க எண்கள் மாறிப் பிழையாகப் பதிவாகியுள்ளன. அத்தோடு -

வர்ணப் பங்களில் **தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்** என்ற தலைப்புப் பதிவாகாமல் தவறிவிட்டது.

எமது சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' தலைமைப் பணிமனை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் சற்றுப் பின்னர் அங்கு அச்சிடப்பட்ட சிறப்பு மலர் பங்கங்களில், முன்னர் எப்போதும் இல்லாதவாறு, மேற்சொன்ன தொழிநுட்ப நேர்த்தியின்மைகள் இடம் பெற்றுவிட்டன

அவற்றின் நிமித்தம் வாசகர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் உண்டாகியிருக்கக்கூடிய அசௌகரியங்களுக்காக மிக வருந்துகிறோம்.

- *ஆசிரியர்.*

## சந்திவெளியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரும் கூட்டாக இணைந்து இந்தத் தேடுதலை மேற்கொண்டனர். சந்திவெளி மற்றும் பாலையடித்தோணா ஆகிய பிரதேசங்களை அதிகாலை வேளையிலேயே சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தேடுதலை மேற்கொண்டனர் வீதிகளில் சென்ற வாகனங்களையும் சோதனைக்குட்படுத்தினர்.

இந்தத் தேடுதலின்போது ஆயுதங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை என்று பொலீ ஸார் தெரிவித்தனர். மூன்று இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணை களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள் ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தேடுதலினால் சந்திவெளிப் பிர தேசத்தில் நேற்றுக்காலை வேளையில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. எனினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. வாழைச் சேனை - மட்டக்களப்பு பிரதான வீதி வழியான போக்குவரத்துச் சேவைகள் யாவும் வழமைபோன்று இடம்பெற்றன. இதேவேளை வாழைச்சேனை - பேத்தாழைப் பிரதேசத்திலும் நேற்றுமுன்தினம் மாலைவேளையில் இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர். (ஐ-க)

## ஐ.நா. உயரதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.தடைப்பட்டுப் போயுள்ள இலங்கையின் அமைதி முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்புவது குறித்து அவர் இந்தச் சந்திப்புகளின்போது ஆராயவுள்ளார். (ஐ-க)

## மக்கள் விருப்பப்படி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் மக்களின் பரிபூரணமான எழுச்சி தவிர்க்க முயாத ஒன்றாகி விட்டது. அதன் மூலம் ஆக்கிரமிப்புக்கான முடிவும் கட்டப்பட்டது.

இதேபோன்று வன்னி பெருநிலப்பரப்பு எங்கும் மக்கள் பேரெழுச்சி கொண்டு இராணுவப் பயிற்சி பெற்றதன் மூலம் ஆக்கிரமிப்புப் படைகளை நாலாதிசைகளிலும் இருந்து விரட்டிச் சென்றனர்.

இதைப் போன்றதொரு காலகட்டத்தையே நாங்கள் இங்கு பார்க்கின்றோம். கடந்த மூன் றரை ஆண்டுகளுக்கு மேலாக சமாதான முயற்சிகளில் அனைத்துத் தமிழீழ மக்களும் விரக்தி கொண்டுள்ளார்கள்.

தமது வாழ்வில் ஏதாவது ஒரு பிரயோசனம் கிட்டும் என்ற நம்பிக்கை மக்களிடம் முற்றாகவே அற்றுப்போய் விட்டது. அதனால் தான் தமக்கு ஆயுதப்பயிற்சியை வழங்கும்படியும் தொடர்ந்து பொறுமையைக் காப்பதை விடுத்து சுதந்திரப் போரைத் தொடர்ந்து சென்று தமது விடிவை விரைவில் பெற்றுத் தருமாறும் எமது மக்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

இந்தமண்ணில் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப தீர்க்கமான முடிவுகளை விடுதலைப் புலிகள் அமைப்பு எடுக்கும். மக்களின் உணர்வுகளும் எழுச்சிகளும் இந்த தேசத்தின் விடுதலை யினை வென்றெடுக்கும் - என்றார் தங்கன். (ஐ-த-7-305-352-301-405)

**மரண அறிவித்தல்**

**Dr. *செல்லையா வேலாயுதபிள்ளை***

*(R.M.O. புத்தளம்)*

தெல்லிப்பழை, தையிட்டிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வதிவிடமாகவும் தற்போது புத்தளத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற Dr. வேலாயுதபிள்ளை நேற்று (01.09.2005) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இராமாசிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும் முன்னாள் பதிவாளர் சின்னையா - இராஜேஸ்வரியின் அன்பு மருமகனும் செந்திருவின் அருமைக் கணவரும் வேல்மகிபன் (கனடா), வேல்செல்வி (லண்டன்), வேல்சுபதி (லண்டன்) ஆகியோரின் தந்தையும் வாகினி (கனடா), ஆனந்தகுமாரசாமி (லண்டன்), சூரியகுமாரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கிரிஷாந், மதுஷா, மாதுரி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பதிவாளர் வளவு,
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
(சி-44894)

தகவல்:
சி.பிரகாஷ்
(மைத்துனர்).

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்



## ஆறுமுகம் ஆன பொருள் ௨௨௨

முருகன் ஆறுமுகன் சிவனின் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் திருமுகங்கள் ஐந்தோடு சக்தியின் அதோ முகத்தையும் கொண்டு ஆறுமுகனாக அழகன் முருகன் விளங்குகின்றான். ஆறு முகங்களும் ஓங்காரத்துடன் கூடிய பஞ்சாட்சரம் என்றும் கூறப்படுகின்றது. முருகனின் மந்திரமான 'சரவண பவ' ஆறெழுத்து மந்திரமாகும். முருகன் எங்கும் நிறைந்தவனாகையால் ஆறுமுகங்களும் ஆறு திசைகளை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மேல், கீழ் என்பவற்றை குறிப்பனவாகும். தத்துவஞானிகள் ஆறு சமயங்களையும் , ஆறு குணங்களையும் அதில் காண்பர். யோகிகள் ஆறு ஆதார கமலங்களாகப் பாவிப்பர். ஆறுதிருமுகங்களும் ஞானம், ஐஸ்வரியம், திரு, வீரியம், வைராக்கியம், புகழ் என்பவற்றைத் தருபவை. பகவத் குணங்களே முகங்களாயின என்றும் பகருவர். பகவத்குணங்களாவன தன்வயத்தனாதல், முதலினனாதல், உடம்பிலனாதல், எல்லா நல[illegible]வனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றுச் [illegible] னாதல் [illegible]ர்பனவாம்.

[illegible]ருகனது படை[illegible]கள் ஆறாகும். இதனால், அவன் படை[illegible]டய பரமன் எனப்படுகிறான். திருப்பரங்குன்[illegible], திருச் சீரலைவாய், திரு ஆவினன் குடி, தி[illegible]வேரகம், பழமுதிர் சோலை, குன்றுதோறாடல் தமிழ் நாட்டின் படை வீடுகளாகும். மாவிட்டபுரம் செல்வச்சந்நிதி, நல்லூர், கதிர்காமம், மண்டூர், கந்தவனக் கடவை ஈழ நாட்டின் படைவீடுகளாகும். படைவீடு பாசறை எனப்படும்.

முருகனது விரத நாள்கள் (கந்த சஷ்டி) ஆறுதினங்களாகும். ஷஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பர். ஷஷ்டியில் விரதமிருந்தால் புத்திர பாக்கியம் கிட்டும் என்பது இதன் பொருள். ஆறு நாள்களிலும் காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம்,செருக்கு, பொறாமை என்ற ஆறு பகைகளை வென்று முருகன் அருள்பெறலாம்.

முருகனது தோள்களும் கண்களும் ஆறின் பெருக்கமாகவே உள்ளன. பன்னிரண்டு தோள்களும் பதினெட்டுக்கண்களும் கூடியவனாக நூறு மாலை அணிந்த வீறுமிக்க வேலனுக்கு ஆறு எண் மாறுபாடற்றதாகவே உள்ளது.

*ஆட்டும் சமயம் ஆறினுக்கும்*
*ஆதாரங்கள் ஆறினுக்கும்*
*அத்துவாவோர் ஆறினுக்கும்*
*அமையும் தானே முதல்வன் என்று*
*நீட்டும் படி யாவரும் தெரியத்*
*தெரிந்தாங்கு ஆறுமுகம் திகழச்*
*செல்வம் மலியும் இடைக்கழிவாழ்*
*சேயைப் பரிந்து காக்கவே*

இப்பாடல் ஆறுமுகத்து உண்மையை கூறு கூறாய் கூறுகின்றது.

ஆறுமுகத்தின் அருட்செயல்களை அருணகிரியார் அழகுற அருளி உள்ளார்.

*ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே*
*ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே*
*குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே*
*ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே.*

ஆறுமுகனின் பாதமே தஞ்சம் என்று அடைந்தோர் நெஞ்சில் அஞ்சாமை தோன்றும் 'சலங் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்' என்பது அலங்காரப் பாடல்.

### செல்லப்பா சுவாமிகள்

நல்லூர் தேரடியில் ஒளிவீசிய ஞானவான்கள் வரிசையில் முதலிடம் வகிப்பவர் செல்லப்பா சுவாமிகள் ஆவார். அடுத்து இடம்பெறுபவர் சிவயோக சுவாமிகள். கடையிற் சுவாமிகள். அல்லது குடைச் சுவாமிகளுக்கும் கணிசமான பங்குண்டு . சித்தர்கள் பித்து தலைக்கேறியவர்கள் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. இதனால் தான் 'விசர்' செல்லப்பா என அழைக்கப்பட்டனர் போலும்.

செல்லப்பா சுவாமிகள் கோயில் முன் நின்று முருகனுடன் உரையாடுவது போல தன்பாட்டில் பிதற்றிக்கொண்டிருப்பார். செல்லப்பன் சாமி காட்டமாட்டான் என்று அவர் வெளிப்படையாகக் கூறியபோதிலும் இதனைப் பொருட்படுத்தாமல் அடியார் கூட்டம் அவரை மொய்த்தது. என்னப்பன் செல்லப்பன், எனக்கருளும் நல்லப்பன், நல்லூரின் பொன்னப்பன் என்று அடியவர் அன்புடன் ஆராதனை செய்தனர். இது அவரின் அருள் வலிமையை அறுதியிட்டுக் காட்டிற்று .எனினும் விசரன் என்று விளங்கிவிட்ட சம்பவமும் நிகழ்ந்தது.

செல்லப்பா சுவாமிகளைப் பார்க்க தேரடிக்கு வந்த யோகநாதன் காந்தசக்தியுள் லயித்தான். 'ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில் பேசாதனவெல்லாம் பேசினான்' என்று புளகாங்கிதமுற்றான். ஆரடா நீ தேரடாவுன் தீரடா பற்று உன்னை நீயறிந்தால் உனக்கொரு கேடில்லை என்பதை உணர்த்தும் மகாவாக்கியங்கள் இவை. யோகநாதனை சிவயோக சுவாமிகள் ஆக்கியவை இவைதாம்.

*சிரித்து நல்லூர் தெருவில் திரிபவர்*
*வெறித்த பார்வையர் வேடம் விரும்பியர்*
*கறுத்த மேனியர் கந்தைத்துணியினர்*
*எரித்தனர் பவம் இனி எனக்கில்லையே*

செல்லப்பா சுவாமிகளின் தோற்றத்தை குறிப்பாகவும் சித்தர்களின் பொதுத்தன்மையையும் இப்பாடல் விவரிக்கின்றது.

### சிவயோக சுவாமிகள்

செல்லப்பா என்ற ஞானகுருவின் ஒளியில் யோகசுவாமி என்ற ஞானபானு 'உருவானது. செல்லப்பா சுவாமிகள் சிரித்துச் சிரித்துச் சொன்னவை எல்லாம் சீடனுள்ளத்தில் சென்று படிந்தன. அவை பிற்காலத்தில் பாடல்களாக வெளிவந்தன. பல்லாயிரரைக் கவர்ந்தன.

இரண்டு யானைகளை ஒரு தறியிற் கட்ட முடியாது. நீ வேறிடம் பார் என்றார் செல்லப்பா சுவாமிகள். எனவேதான் கொழும்புத்துறையில் கொட்டில் அமைத்து வசிக்கத் தொடங்கினார். இதனால் கொழும்புத்துறைச் சாமியார் எனப்பட்டார்.

*ஒரு பொல்லாப்பு மில்லை*
*முழுதும் உண்மை*
*நாமறியோம் ஆரறிவார்*
*எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்*

சீடரின் செவியில் செல்லப்பா சுவாமிகள் மொழிந்த மகா வாக்கியங்கள் இவை- இவை நான்கும் உபநிடதங்கள் போன்றவை அத்துவித உண்மைகள். இவற்றை மொழிந்தபின் செல்லப்பா சுவாமிகள் வெறும் கோதானார். இந்தநிலையே இராமகிருஷ்ணருக்கும் ஏற்பட்டது. கொடுப்பதிலும் கொள்வதிலும் உண்டாகும் ஒருவித நிலை இதுவாகும்.

*ஆசான் அருளால் அகந்தை அழிந்து*
*ஆசான் - அருளால் அருள் மழை பொழிந்தது*
*ஆசான் அருளால் ஆனந்தம் விளைந்தது.*
*ஆசானருளால் ஆசானாயினேன்.*

இதுவே யோக சுவாமிகளின் புளகாங்கித நிலை

. 'நான் கெட்டவா பாடி தெள்ளேணம் கொட்டும் நிலை வாய்க்குமானால் நாமும் சித்துக்கள் கைவரப்பெறலாம்'.




# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

நல்லூரின் நாயகனே! தேர் மீது வந்து திருவருள் தாரீர்!

அனைத்துவகை சைவ. அசைவ உணவுகளுக்கு

## திறீ ஸ்ரார் ஹோட்டல்

THREE STAR HOTEL இல. 102, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 3817-7135

சுவையின் சங்கமம்

வீட்டுச் சாப்பாடு....! ஹோட்டலில்

(C/44620)

## யாழ் போன் சொப்



Dialog GSM

இல. 10, நவீன சந்தை மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7135, 3817



அருள் தருவாய் முருகா!
ஆறுமுகா வா! வா!
தேரிலே வந்து நிம்மதி தருவாய்

## அருள் விநாயகர் ரேடர்ஸ்

106,Stanly Road, Jaffna.T.P.: 021 222 5558

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

108,Stanly Road, Jaffna. | Kandy Road, Chavakachcheri. | Main Road, Changanai.

ஜப்பான் தயாரிப்பு மோட்டார் சைக்கிள்களும், அதன் அனைத்து உதிரிப்பாகங்களும் இந்திய தயாரிப்புக்களான HERO HONDA,TVS,BAJAJ போன்றவற்றுக்கான அனைத்து உதிரிப்பாகங்களும் TOYATA வாகனங்களுக்குரிய யாழ் முகவர்களாகவும், ஜெனரேற்றர்கள், லான்மாஸ்ரர்கள் வாகன அனைத்து பற்றரிகள், வாகன சோ பொருள்கள் போன்றவற்றின் விற்பனையில் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும், பல கிளைகளைக் கொண்டியங்கும், தமக்கென தனி இடத்தில் முன்னணி வகிக்கும் தனிப் பெரும் ஸ்தாபனம்

(C/44602)

நிரந்தர சமாதானம் எம்மிடம் சேர அனைவருக்கும் அருள் புரிவாய் நல்லை திருக்குமரா

மலிவு விலைதானா? என்பதை அறிந்திடவும்
நாளைய நாகரிகத்தை முதல்முதல் இன்றே
அறிமுகம் செய்தவர்களா? என்பதைப் பார்வையிடவும்
ஒருமுறை வியஜம் செய்து பாருங்கள்

## கிறீன் பலஸ் எம்போறியம்



யாழ் நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லா தரங்கள்! அழகிய
புடைவைத் தினுசுகளின்
தனிநீட்டப்பட்ட சாம்ராஜ்யம்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.




## கந்தன் ஆலயம் தொழவேண்டும்

**பல்லவி**

ஆலயம் தொழவேண்டும் நல்லூரான்
ஆலயம் தொழ வேண்டும்

**அனுபல்லவி**

காலை மாலை தேடி நீ
காத்துக் கழிக்க வேண்டாம்

(ஆலயம்)

காசு பணம் வேண்டாம்
கற்பூரத் தீபம் வேண்டாம்
வாச மலரும் வேண்டாம்
வாழைப் பழமும் வேண்டாம்

(ஆலயம்)

வஞ்சம் பொறாமை சூழ
மறந்துமே எண்ண வேண்டாம்
பஞ்சமா பாதகர் தங்கள்
பக்கமே போக வேண்டாம்

(ஆலயம்)

நெஞ்சம் தூய்மை வேண்டும்
நேர்மை ஒழுக்கு வேண்டும்
கஞ்ச மலர்பாதக் கந்தன்
கழலடி ஒன்றே வேண்டும்

(ஆலயம்)

அமரர் பண்டிதர் சி.க. சேந்தன்.




அழகுத் தேரேறி வரும் ஆறுமுகன் அருள்பெற
அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

★ திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும்
★ நவீன ரக ஆடைத்தெரிவுகளுக்கும்
★ சிறுவர் சிறுமியர்க்கான சிறந்த உடைகளுக்கும்

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு
பிரத்தியேக காட்சியறை
இன்றே நாடுங்கள்!

இளஞ்சிட்டுகளின்
இதயங்கவர்ந்திடும்
இன்பமயச்
சோலை

மகாநதி புடைவையகம்

இல.4, நவீன சந்தை, சாவகச்சேரி. இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

இல.16, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். ☎:-222 2552



வள்ளி தேவயானையுடன் வலம் வரும் வேலவா அள்ளி அருள் தந்திட ஓடியே வாருமையா!

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

நவீன முறையில் தங்க நகைகளைகலை
அம்சத்தோடு கூடிய பம்பே டிசைன் மெசின் கட்டிங் மூலம் செய்து
பெற்றுக்கொள்ள.

ஓடர் நகைகளும் செய்து பெற்றுக் கொள்ளலாம்

ஸ்ரீ நாகா பம்பே டிசைன் அன் கட்டிங் சென்றர்

288.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இன்றே தேருலாவரும் நல்லூரனே ! பாரெல்லாம் பூரண அமைதி பரவிட பற்றிப் பிடித்தோம் உன் பாதம் பார்த்திடப்பா எம் பக்கம்

V.S.P லஞ் ஓயில்

உணவுத் தேவைகளுக்கு
சுத்தமாகத் தயாரிக்கப்படுவது

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2785

பரிமளா ஸ்ரோர்ஸ்

நல்லைக் கந்தனே கலியுக வரதனே தேரேறி வந்து வினைபோக்க வா! வா!!

விக்னேஸ்வரா நகைப் பூங்கா

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 4590022
10B,34D, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா. தொ.பே: 024 2221857, 024 222 1910
457, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6 தொ.பே: 011 2559535

முடிப்பிள்ளையார் நகைப்பூங்கா

இல.167.யாழ் சாலை, கிளிநொச்சி. 021 459 0022, 024 222 1857, 024 222 1910, 011 255 9535





சித்திரத்தேரில் வரும் சிங்காரவேலனே! இத்தினம் உனைப்பணிந்தோம் வரமருள வேண்டும்!

அழகிய கலை நயம்.... எழிலுறு தொழில் வளம்....

உயர்தரமிகு தங்கநகைகளுக்கு சிறந்த இடம்:

துயா நகைப்பூங்கா

213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5846, 0777 840379



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## வர்ன ரதம் வருகுதய்யா!

வர்னரதம் வருகுதய்யா நல்லைப்பதி வீதியிலே
எண்ணமெல்லாம் கொள்ளை கொள்ளும் ஆறுமுகன் அதில்வருவார்
கொஞ்சுமெழில் கூடிடவே வள்ளி தெய்வயானையுடன்
தங்கவேலர் மத்தியிலே அழகுவுற வீற்றிருப்பார்
நாதஸ்வரம் மேளதாளம் மேலோங்கி ஒலித்திடவே
வேதவொலி நாதவொலி வீதியிலே முழங்கிடுமே
வீதிப் பஜனையிலே தாளவொலி மிதந்துவர
மனமுருகிப் பண்பாடி வேலவனைத் தொழுதிடுவோம்.

கவிமணி
கந்தமுருகேசதாசனார்.


"காணக் கண்கோடி வேண்டுமே கந்தனின் தேர் விழா" அழகன் முருகன் அருள்பெற வாழ்த்துகின்றோம்

* புதிய பழைய இடைக்கால AUDIO CD's
* புதிய பழைய VIDEO CD's
* அனைத்து வகையான MP3 CD's
* கர்நாடக சங்கீத CD's
* தமிழ், ஆங்கில DVD
* இந்தி, கிறிஸ்தவ பக்தி
* பாடல் CD's
* SOFTWARES, GAME CD's
* உலக நாடுகளின் டிஸ்கவரி CD's
* குழந்தைகளுக்கான நேசரி CD's



DVD Software, ACD இடைக்கால நம்பி
புதிய சில்றன்ஸ் ACD and VCD, புதிய பக்தி VCD, Yoga VCDக்கள்

உங்கள் இசை ஆவல்களைப் பூர்த்திசெய்ய எம்மிடம்

MUSIC WORLD

பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 6554
(C/44607)



நல்லையில் கந்தன் இரதமேறும் இந்நாளில்
அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும்
வேலவன் அருள்பெற வாழ்த்துகின்றோம்

FedEx Express

WESTERN UNION
பணப் பரிமாற்றம்

திருமுருகன் கொம் நெற்

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7210

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027 Fax - 021 226 2993



தேரேறி வந்தருளும் நல்லைக் கந்தனே! நிம்மதியை தர வாருமையா!

"SOFT LOGIC"
ஒரு
வருட
உத்தரவாதம்
ONE YEAR
WARRANTY
NOKIA
CONNECTING PEOPLE

எம்மிடம் கையடக்கத்
தொலைபேசிக்குரிய
உதிரிப்பாகங்கள் அனைத்தும்
பெற்றுக்கொள்ளலாம்

Mobile Phone+SLT Phone
Service and
Repair Phone, Lock Relese,
Dialog Kit Sim Card

வானகம்
போன் சிற்றி

இல.6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(அன்னை நாகா பூட்சிற்றி முன்பாக) T.P:077 3151411



தேரேறி வரும் முருகா ! மண்ணில் நீடித்து அமைதி பெற வேண்டும்

யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்



Style Park
Perfect Collection

ஸ்ரைல் பார்க்



நீங்கள் குதூகலமாகக் குடும்பத்தினருடன் உங்கள்
ஆடைத் தேவைகளை நீங்களே தெரிவு செய்து மகிழ்ந்திட
யாழ். நகரில் ஒரே புடைவை விற்பனைக் காட்சியகம்

No. 171, K.K.S. Road,
Jaffna. T.P: 8383

இல.171, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேர்மேல் எழுந்தருளிவருகின்றான். சொரூப நிலையில் இருக்கின்ற ஆண்டவன் தடத்த நிலைக்கு வருகின்ற போது முதன்முதல் காட்சிதந்த திருவுருவம் ஆறுமுக சுவாமி. பூரணப் பொருளாக விளங்குகின்ற திருமுருகன் ஆறு திருமுகங்களுடன் அடியார்க்கு அருள்பாலிக்க வருகின்றான். ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் விளங்கித் தோன்றும் எம்பிரானுடைய தரிசனத்தில் நாம் உள்ளக் கிளுகிளுப்பை அடைகிறோம். அவன் இன்பம் பாய்ச்சிச் சாவாத நிலை தருகின்றான்.

சிவபிரானுடைய ஐந்துமுகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாகத் திருவவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல் கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம் பெருமானின் கருணைப் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன. மனிதனுடைய உடம்பில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப் பெருமான் தனித்தனியே நின்று பாதுகாக்கின்றான்.

ஆறுமுகத் தத்துவம் மிகமிகப் பழமையானது. மிகமிகப் புதுமையன்று எல்லாக் காலத்துக்கும் உரியது. அதுவே ஆதியானது, அந்தமானது, இன்னொரு வகையாகச் சொல்லப்போனால் ஆதியும் அற்றது, அந்தமும் அற்றது. 'தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்' என்று கந்தபுராணம் பாடினால் 'ஆதியொடும் அந்தம் ஆகிய நலன்கள் ஆறுமுகம் என்று தெளியனே' என்று திருப்புகழிலே அருணகிரிநாத சுவாமிகள் பாடுவார்.

வரிசையான ஆறுமுகத்தையும் நாம் கண்ணாலே கண்டு விட்டால் ... காணவேண்டும். ஆறுமுகத்தைப் ... சொல்கின்ற பாடல்களை எல்லாம் ... அனந்த சாகரத்தில் ... ஆறுமுகங்களையும் காணும் நிலை உண்டாகும்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே எம்பெருமானுடைய ஆறுதிருமுகங்களும் செய்கின்ற செயல்களை அழகாகச் சொல்கின்றார்.

ஒளிதரும் முகம் (ஒரு முகம்)

"மாஇருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்"

உலகம் எங்கும் பரந்து கிடக்கின்ற இருளை எல்லாம் ... ஒருமுகம். சூரியன், சந்திரன்,












# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்




## செந்தமிழின் மனைமாட்சி

ஞானத் திரு முருகன்
நல்லைத் திருத் தலத்தில்
தேனைப் பொழிந் தெம்முன்
தேரில் வரு கின்றான்!

பேரின்பப் பே றீயும்
பெருமை மிகு நல்லூரான்
தேரேறி வரும் காட்சி
செந்தமிழின் மனை மாட்சி!

சித்தரத்தே ரேறி வரும்
சிங்கார வடி வேலன்
பத்திரமாய் எம் மினத்தை
பாரினிலே வாழ வைப்பான்!

தென் நல்லை கு.பகீரதன்.


நல்லைக் கந்தனே! ஞானவடிவேலனே!
தொல்லைகள் தீர தேரேறி வாருமையா!

அசல் 22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த நுட்ப வல்லுநர்களால் மனத்தைக் கவர்ந்த வடிவங்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள்



திருவருள் நகைமாடம்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
(C/44618)

Multilac®
SHEEN EMULSION



வர்ண உலகில் புரட்சி

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வர்ணங்களை கந்தவேலன் COLOUR BANK நிறைந்திடும் வர்ணங்களில் முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட சேர்க்கையில் உங்களுக்கு வழங்குகின்றது. உங்கள் வர்ணப்பூச்சு தேவைகள் அனைத்திற்கும் மன்றிலைக் பெறித் விற்பனையில் முன்னணியில் நிற்பவர்கள்

கந்த வேலன் வர்ண வங்கி
Kanth Velan Colour Bank
(C/44615)
இல. 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 2822
கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி, நெல்லியடி. T.P: 021 222 3290

திருநெல்வேலி நகரில் புதுப் பொலிவுடன் குடும்பத்தினருடன் குதூகலமாக உங்கள் தேவைகளை பொதி செய்த நிலையில் நீங்களே தெரிவு செய்து மகிழ்ந்திட புதிய உதயம்.

ஆறுமுகப் பெருமான் அழகிய ரதத்தில் ஆரோகணிக்கும் அற்புதக் காட்சி காண ஓடோடி வாரீர்!
அனைத்து பொருள்களும் பொதி செய்யப்பட்டவை
★ குறைந்த விலை ★ உயர்ந்த தரம்
★ நவீன வசதிகளுடன் கூடிய விற்பனைக் காட்சியகம்
★ இல்லத்தரசிகளின் மனங்களைக் கவரும் திருநெல்வேலி நகரில் முற்றிலும்
★ குளிரூட்டப்பட்ட ஒரே விற்பனையகம்.

ஜீவா (F) பூட் ஸரவ் சப்ளையர்
Jeeva Food Stuff Supplier
இல. 43/4 பலாலி வீதி, திருநெல்வேலி. T.P: 0773102952

Pre paid Sim
Post paid Sim
More card 350/=,1000/=



வினை தீர்க்கும் வேலவா! எமைக்காக்க ஓடிவா!
இன்னும் பல தொடர்பாடல் சேவைகளைப் பூர்த்தி செய்திட
MOBITEL.G.S.M இன்
யாழ். முன்னணி நிறுவனம்.

யாழ்.மொபைல்ஸ்
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. T.P.: 071 416 8418, 0773102952



இன்று தேரேறி வரும் திருமுருகா! நாடிவருவோர் நலம் பேணி நம்மவர்க்கெல்லாம் நல்லருள் பாலிப்பாய் அய்யனே!!

யாழ் மைதிலி
157, SEA STREET, COLOMBO-11
TEL: 011 2396239,



ஓடர் நகைகளை குறித்த தவணையில் செய்து தரப்படும்.

ஜுவலர்ஸ் மைதிலி நகைமாடம்
89A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7902, 077 6092154

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## ஆறுமுகன் அழகே!

சீரான நல்லைப் பதியே - அங்கு
தீராத வினைகள் அறுமே!
நேரேறு கோபுர நிறைவே - நல்ல
நித்திய பூசைகள் உளதே!
தேரேறு முருகன் அழகே - அந்த
திவ்வியம் காணில் அருளே!
ஆராத இன்ப ஊற்றே - ஆறு
முகமான அமுதப் பொருளே!

அரியாலையூர் வே. ஐ. வரதராஜன்.

## தேரேறி வரும் நல்லை நாதன்!

சித்திரத் தேரேறி வள்ளி தெய்வானையுடன்
முத்தமிழ் வித்தகன் வீதி உலா வருகின்றான்
பக்தியுடன் வடம் பிடித்து பாங்காய் இழுத்துவர
உத்தம பக்தர்களே உடனோடி வாருங்கள்

மு. வே. அன்பழகன்.




வீட்டில் இந்தியன் பெஷன்

நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன ரக ஆடைகளுக்கும்
புத்தம் புதிய டிசைன்களிலான பட்டுப்
புடவைகளுக்கும் நாடவேண்டிய சிறந்த இடம்:

77, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 6440

(C/44617)

நல்லூர் வீதியிலே வள்ளி தெய்வயானையுடன் தேரேறி வந்து தீர்க்கும் வேலவனே!



தங்க நகையுலகில்... நம்பிக்கை,
நாணயத்துடனான நேர்த்திமிகு சேவைமாற்றம், நியாயமான
முறையாலும் நல் நம்பிக்கை பெற்று, நகையுலகிலேயே தனியுலகு படைத்து நிற்கிறது.....

நித்திய கல்யாணி நகை மாளிகை

உருக்கு நகைகள் அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

205/4, கஸ்தூரியார் வீதி,(ராஜா கட்டத் தொகுதி) யாழ்ப்பாணம். தொ.பே: 021 4590214, 0777 111415

(C/44608)




தினம் மயிலேறி வலம் வந்து உலகத்தைக் காத்திடும் முருகா!
இன்று தேரேறிப் பவனிவந்து எம்மவரைக் காத்திடுவாய் அப்பனே!!

ICI Dulux Necol Glidden



ICI தயாரிப்புகளான CIC பெயின்ற்ஸ் நிறைவேற் லிமிட்டட் டியூகோ, டியூலக்ஸ்,
கிளிடன், நிக்கோல், அல்ரா(ULTRA), மாஸ்ரபலட் பெயின்ற் வகைகளுக்கு
யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்:

சிவன் மோட்டோர் ஸ்ரோஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 2763

World's No 1

பாரினில் அமைதி பற்றிப் பரவிட.. தேரினில் வரும் முருகா! திருவருள்பாலிப்பாய் அப்பனே!

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட.



(C/44603)

LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 02-09-2005

### தீர்வுகொண்டு தேரேறி வருக!

ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
தேறுதலைத் தந்தே தேச நலன் காக்க தேர்லேறி வருக!
நாறுமாலையோடு நலிந்தவரைக் காக்க
நாலுதிக்கும் தொழவே நல்லூரா தேர்லேறி வருக!
விறுகொண்ட சூரன் வெம்பகையைமுடித்த
வேலைத் தாங்கி முருகா தேர்லேறி வருக
தீர்வு தந்தெமது திருநாட்டைக் காக்க
சேதியொன்று கொண்டு தேர்லேறி வருக.

– அருள்

பக்தரைக் காத்திட பவனிவரும் முருகா!
பாரினில் அமைதியை நிலைபெறச் செய்வாய் குமரா!
உங்கள் பொதிகளை கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் கொண்டுசென்று உரிய உறவினர்களிடம் சேர்ப்பிக்கவேண்டுமா?
இதோ!
களஞ்சியப்படுத்தும் வசதி
தினசரி துரித சேவை
குறைந்த கட்டணம்
பொருள்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம்
பொருள்களுக்கு ஏற்படும் செலவுகள் சேவையின் பின்னர் பற்றுச் சீட்டுடன் அறவிடப்படும். எதையும் நேரில்பேசித் தீர்த்துக்கொள்ளும் வசதியும் உண்டு.
பிரகாஸ் ட்ரான்ஸ்போட் சேவிஸ்
(பிரகாஷ் ஏஜென்சி) (C/44647)
221, டாம் வீதி, கொழும்பு-12. தொ.பே.:01 542310, 01 387857, Fax: 338736.
457, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 2145, Fax:021 222 2958.

வள்ளிமணவாளனே புள்ளிமயில் வாகனனே!
துள்ளி ஓடி வந்தே அருள்புரிய வாரீர்!
அசல் 22 கரட் தங்க நகைகளை ஒழுங்கு, உத்தரவாதத்துடன் நவீன அழகிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள:
அகிலன் நகைமாடம்
240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/44648)

அழகிய நவீன டிசைன்களிலான தங்க நகைகள் தரமாகச் செய்து பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:
ஸ்ரீமாரி நகைமாடம்
49 (187), கே.கே.எஸ். வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (C/44644)

ECHO LAMP SPIRAL
ENERGY RATING
தந்தைக்குபதேசம் செய்த குருநாதா!
தரணி செழித்திட வா வா முருகா!
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
புடைவைத் திணுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ், சேட்டிங், சூட்டிங்ஸ், சேட், டெனிம், ஜீன்ஸ், T-சேட் (ரெடிமேட்) மற்றும் அனைத்துவகையான ஆடைத்தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.
ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
இல.27, பெரிய கடை, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5724.
(C/44645)

ஓங்கார ரூபா ஓம் சரவணபவா!
உன் அடியார் குறைதீர்க்க ஓடோடி வருக!!
ஏகாம்பரம் புடைவை மாளிகை
(C/44646)
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

பக்தரைக் காத்திட பவனிவரும் முருகா!
பாரினில் அமைதியை நிலைபெறச் செய்வாய் குமரா!
பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு
ஜெகன் களஞ்சியம்
இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 5035
(C/44642)

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன்
அனைவருக்கும் இல்லையெனாது
New NIRANJANAS Nagai Maligai
அசல் 22 கரட்டில் குறித்த தவணையில் நம்பிக்கையுடன் செய்துபெற்றிட யாழ் நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்
நியூ நிறைஞ்சனாஸ நகைமாளிகை
83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே. 071-2270458, 077-6070679. E.S.பேரம்பலம் முன்பாக (C/44636)

சூரனை வதம்செய்த சுப்பிரமணியனே!
துன்பம் தீர்க்கத் தேரேறி வருக! வருகவே!!
ACL CABLES
சொங்கி சுவிச், நியூப் பிற்றிங் மற்றும் மின்சாரப் பொருள்கள் எல்லோன் பைப் வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
நியூரோன் எலெக்ரிக்கல்
(C/44639)
Phone : 021-222 2037
Fax : 021-222 2502
440, 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஏகவிநியோகஸ்தர்: ஏ.சி.எல் வயர்

சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள், பட்டுவேட்டிகள், புதுரக மனங்கவர் சல்வார் கமிசுகள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவருக்குமான ஆடைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றிட...
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...
த. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
இல.21, சிறப்பு அங்காடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 2826.
கிளை 27, சிறப்பு அங்காடி (மேல்மாடி), நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/44641)

# நல்லூர்க் கந்தனின் தேர் வடம் பிடித்தால் வேண்டிய வரங்களைப் பெற்றிடலாம்

பெருந்திருவிழாவில் உயர்ந்த ஓர் உற்சவம் - சிறப்புமிக்க திருவிழா தேர்த் திருவிழா வாகும். கொடியேற்றம் தொடக்கம் தீர்த்த உற்சவம் வரையான திருவிழாக்கள் இறைவனின் ஐந்தொழிலையும் எடுத்தியம்புவனவாக உள்ளன. அழித்தல் எனப்படும் சங்காரத் தொழிலை இரதோற்சவம் விளக்குகின்றது. இது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழித்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும் திருவிழாவும் கூட.

ஈழத்திருநாட்டில் முருகன் ஆலயங்கள் பல இருப்பினும் நல்லூர் முருகன் ஆலயம் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. பண்டைக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிமன்னன் நல்லூரை இராசதானியாக அமைத்திருந்தமை இந்த ஆலயத்துக்கு மேலும் சிறப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

அன்னதானக்கந்தன், காவடிக்கந்தன், அலங்காரக்கந்தன் என்று எல்லாம் அழைக்கப்படும் முருகன், நல்லூரில் மூன்றுக்கும் பொருத்தமானவனாக ஆட்சி புரிகின்றான். அதேவேளை அலங்காரக் கந்தன் என்று அடியார்களால் போற்றப்பட்ட நல்லூரான், வருடாந்தப் பெருந்திருவிழாவின்போது அங்கப்பிரதிஷ்டை செய்பவர்கள் எண்ணிக்கை பெருகி இன்று பிரதிஷ்டைக்கந்தன் என்ற பெயரையும் பெற்றுவிட்டான் போலும். அங்கப் பிரதிஷ்டை சகல நோய்களையும் தீர்க்கும் ஒன்றென மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஊர் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் அன்று நாம் ஒன்றுகூடித் தேர் இழுத்தோம். இன்று புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்கள் பலரும் இங்கு வந்து தேரிழுப்பதை நாம் காண்கின்றோம். இவ்வாறு வெளிநாட்டிலிருந்து வருகைதருபவர்கள் பலரும் தமது அடுத்த தலைமுறையினரையும் நேரில் கூட்டி வந்து ஆலயதரிசனம் குறித்து அவர்களுக்கு விளக்கிக் கூறுவதையும் இன்றைய ஆலயங்களில் காணப்படக்கூடியதாக உள்ளது.

தேரானது பண்டைய நாகரிகத்திலும் இருந்துள்ளது. இது கட்டுத்தேராக ஆரம்பித்து சித்திரத்தேராகவும், பொற்தேராகவும் இன்று வளர்ச்சி கண்டுள்ளது. சிற்பத்தேர் அமைக்கும் பொழுது சமய சித்தாந்தக்கருத்துக்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைவாக நிர்மாணிக்கப்படுகின்றது. தேரின் கால், அரை, தலை என்று மூன்று பிரிவுகளும் பாதாளம், பூலோகம் . மேலோகம் என அமைகின்றன. நல்லூரில் உற்சவ காலத்தில் தினமும் வீதி உலாவரும் முருகப்பெருமான், தேர்த்திருவிழாவின்போது பெரும் பக்தி பூர்வமாக பக்தர் கூட்டத்தின் மத்தியில் 'தெப்பம்' மிதப்பது போன்று அசைந்து அசைந்து உலாவருவது கண்கொள்ளாக்காட்சியே. அரோகராகோஷத்துடன் அங்கப்பிரதிஷ்டை செய்வோரும் , காவடி ஆடுவோரும், தமது நேர்த்திகளை நிறைவு செய்வோரும் என எல்லாமே கண் கொள்ளாக்காட்சிகளாகும்.

சிவபூமியில் நிறைவான தெய்வமான கலியுக வரதன் கந்தன், உதித்தனன் உலகம் உய்ய என்ற கூற்றுக்கிணங்க சைவமும், தமிழும் உலகெங்கும் வளர வழிகாட்டி வருகின்றான். முருகன் அடியார்களான செல்லப்பா சுவாமிகள் முதல் யோகர் சுவாமிகள் வரையிலான சித்தர்களும் நல்லூருக்கு புகழ்சேர்த்தவர்களே.

இன்று கோயில்கள் தோறும் மடங்கள் அமைத்து அன்னதானம் நடைபெறுகிறது. அன்னதானம் தீராதநோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுவது சந்நிதிவேலனின் திருவருள் என்பது அடியார்கள் அறிந்த மாபெரும் உண்மையாகும். அன்னதானம் மட்டுமன்றி இன்றைய உற்சவங்களில் வீதிகள் தோறும் தாகசாந்தியளிப்பதும் பெரும்பணியாக வளர்ந்து வருகின்றது. நல்லூர் ஆலயச் சூழலில் இத்தகைய பணிதொடர்வது வரவேற்கத்தக்கது.

இத்தகைய பெருமைமிக்க நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவ வழிகாட்டவேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

**க.கனகராசா**















# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேரேறும் ஆறுமுகன்



தேசம் மலர்ந்திட தேரேறும் ஆறுமுகன்
தோள்கள் மகிழ்ந்திட ஊராளும் ஆறுமுகன்
நாசம் தொலைந்திட நாடாளும் ஆறுமுகன்
நல்லவை விளைந்திட வீடாளும் ஆறுமுகன்

அமைதி நீண்டிட வடமாகும் ஆறுமுகன்
ஆளுமை தோன்றிட மயிலாகும் ஆறுமுகன்
கயமை அழிந்தட கவியாகும் ஆறுமுகன்
காதல் வாழ்ந்திட மரபாகும் ஆறுமுகன்

வள்ளி தெய்வானையுடன் ரதமேறும் ஆறுமுகன்
வசந்தம் நெய்திட தமிழாகும் ஆறுமுகன்
தொல்லை வினையகல தேனாகும் ஆறுமுகன்
தாகம் போயகல வானாகும் ஆறுமுகன்

வேங்கை முகமாகி தேரேறும் ஆறுமுகன்
வெற்றி யுகமாகி ரதமேறும் ஆறுமுகன்
தேன்கை நிலவாகி தேரேறும் ஆறுமுகன்
தேனில் மழையாகி ரதமேறும் ஆறுமுகன்

நல்லை அமிழ்தன்.

# கந்தனிடம் சரணாகதி கேளுங்கள் அவன் தன்னையே எமக்கு தந்திடுவான்



முருகப் பெருமான் தோன்றிய வரலாற்றைப் பரிபாடல் விரித்து உரைக்கின்றது. திருமுருகாற்றுப்படையும் செவ்வேளின் தோற்றத்தை கூறுகிறது. காலைக் கதிரவன் நீலக்கடலின்றும் நிவந்தெழும் இயற்கை அழகை அந்த அழகுக் காட்சியில் தமது மனதைப் பறிகொடுத்த தமிழ்ப் பெருங்குடி மக்கள் இவனே இறைவன் என்று வழிபடத் தொடங்கினர். இந்த இயற்கை வழிபாடே காலம் செல்லச்செல்ல செவ்வேள் வழிபாடாக நிலைத்தது. முருகன் என்றால் அழகு, இளமை, மென்மை என்று தமிழ்மக்கள் கருதலாயினர்.

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமலமூர்த்தி
ஆறுமுக வருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலம்போதின் வீற்றிருந்தருளி னானே"

– கந்தபுராணம்.

சரவணப் பொய்கையிலே ஆறுமுகத் தண்ணல் அருளொளி வீசியவாறு எழுந்தருளிய சிறப்பை மேற்கூறிய பாட்டிலே கச்சியப்ப சிவாச்சாரியார் மிக அழகாக அருளியுள்ளார். முருகனுக்கு உகந்த இடம் மலையும் மலை சார்ந்த இடமுமாகும். ஆகவே, அவன் குறிஞ்சித் தெய்வம் ஆவான். அந்த அழகுத் தெய்வத்தை 'சேயோன்' என்றும் அழைத்தனர்.

பாரதம் பாடிய பெருந்தேவனாரும் 'கந்தப் பெருமானது திருவடி, திருமேனி, ஆடை, அலங்காரம், வேல், கோழிக்கொடி ஆகிய யாவற்றையும் செந்நிறமாகப் போற்றினார். சங்கப்புலவர்களாலும் செம்மைநிறமுடைய முருகன் அழகுத் தெய்வமாகப் போற்றப்பட்டான்.

சாதிகளாகவும் குலங்களாகவும் குடிகளாகவும் தமிழ் மக்கள் வாழ்ந்த காலத்தில் கொற்றவை வேலன் என்ற தெய்வமே சிறப்பு வழிபாட்டிற்கு உரியதாக இருந்துவந்ததை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

### வேட்டுவக்கோலம் கொண்ட முருகன்

திருத்தணிகை மலையில் உறையும் முருகன் நாரதர் வேண்டுகோளுக்கிணங்க வள்ளிக்கு அருள்புரியக் கருதி வேட்டுவக்கோலம் கொண்டான் முருகன்.

"காலிற் கட்டிய கழலன் கச்சினன்
மாலைத் தோளினன் வரிவில் வாளியன்
நீலக் குஞ்சினன் நெடியன் வேட்டுவக்
கோலத் தைக்கொடு குமரன் தோன்றினான்"

– கந்தபுராணம்

திருமுருகாற்றுப்படை கூறும் விவரங்களைப் பார்க்குமிடத்து ஆறுமுகப் பெருமானின் ஒரு திருமுகம் உலகின் இருள் அகற்றவும் மற்றொரு திருமுகம் அன்புடன் துதிப்பவர்க்கு வேண்டியவரம் அருளவும் மூன்றாவது திருமுகம் மறைவல்லோர் செய்யும் வேள்வியைக் காக்கவும் நான்காவது திருமுகம் வேதாகம உட்பொருளை முற்றும் துறந்த முனிவர்கட்கு உணர்த்தவும் ஐந்தாவது திருமுகம் பகைவர்களை இல்லாது செய்யவும் ஆறாவது திருமுகம் வள்ளியுடன் மகிழ்ந்து இருக்கவும் காண்கிறோம்.

சூரபன்மனது கொடுமைகளை தாங்கொணாத நிலையில் மனச்சோர்வுற்று தன்னம்பிக்கை இல்லாத நிலையில் இருந்த இந்திரன் முதலியோர் முருகனது திருப்பெருவடிவத்தையும் அவனது பேராற்றலையும் முழுமுதற்றன்மையையும் கண்டு தங்கட்கு எதிர்காலத்தில் செம்மையான வாழ்வு கிடைக்கும் என நம்பித் தேறி, கந்தப்பெருமானைத் தமது பரம்பொருளாக நினைந்து பக்தி செய்து தொழுதநிலையைக் கந்தபுராணத்தில் காணமுடியும்.

நிலவுலகும் பாதாலமும் திருவடிகளாகவும் மாதிரவரைப்பு இருதோள்களாகவும் வானம் முதலிய மேலுலகங்கள் அனைத்தும் திருமுடிகளாகவும் முச்சுடரும் கண்களாகவும் நடுவிடமெல்லாம் திருமேனியாகவும் வேதங்கள் திருவாயாகவும் ஞானங்கள் திருச்செவிகளாகவும் மாலயன் இருவரும் இருபக்கங்களாகவும் உமையம்மை சிந்தையாகவும் சிவபிரான் உயிராகவும் கொண்ட முருகன் தன் திருப்பெருவடிவத்தை இந்திரன் முதலியோருக்குக் காட்டினான்.

### முருகப்பெருமானின் விசுவரூபம்

மேலும் சூரபன்மனுடன் நடந்த நான்கு நாள் போரில் முருகவேள் சூரபன்மனுக்கு காட்டிய விசுவரூபத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் கூறும் அழகைப் பார்ப்போம்.

அகவடியில் வரைகளும் புறவடியில் கடல்களும் திருவடி விரல்களில் இடியும் நாள்களும் கோள்களும் பரட்டில் வருணன், குபேரன், நிருதி முதலியோர்களும் கணைக்கால்களில் முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும் முழந்தாளில் விஞ்சையர், வானவர் முதலியோரும் தொடையில் இந்திரனும் அவன் மைந்தனும் தொடை முதலில் கூற்றுவனும் காலனும் கடிதடத்தில் அசுரர்களும் பக்கங்களில் தேவர்களும்–

மூலாதாரத்தில் நாகர்களும் குறியில் அமிர்தமும் உந்தியில் உயிரினங்களும் மார்பில் கலைகளும் முப்புரிநூலில் ஞானமும் உரோமத்தில் அண்டங்களும் அங்கையில் அகிலபோகங்களும் தடந்தோள்களில் திருமாலும் விரிஞ்சனும், செங்கை விரல்களில் தேவப் பெண்டிரும்–

கழுத்தில் ஒலித்திரளும் அக்கினியும் மணிவாயில் வேதங்களும் பற்களில் எழுத்துக்களும் நாவில் சிவாகமங்களும் இதழில் மனுவின் விஞ்சைகளும் மூக்கில் அணிகலனும் விழிகளில் சோமனும் கதிரவனும் செவியில் திசைகளும் திருநுதலில் குடிலையும் (பிரணவமந்திரம்) சென்னியில் பரமான்மாவாகிய பரசிவமும் பொருந்தித் தோன்றும் வண்ணம் பலகோடிப் பகலவன் ஒளியுடன் முருகன் தன் பேருருவைச் சூரபன்மனுக்குக் காட்டியதாக நவில்வர். இத்திருப்பெருவடிவத்தைத் தரிசித்த சூரபன்மன் உணர்ந்து உளந்திருந்திய நிலையில்

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ"

– கந்தபுராணம்

பக்தியுடன் போற்றும் நிலைக்கு வந்தான் சூரபன்மன்.

'சிந்தனை நின் தனக்காக்கி' என்ற திருவாசகத்தில் எமது சிந்தனையை, பார்வையை வாக்கை அவன் திருப்பாதத்தில் முழுமையாக அர்ப்பணிக்கும் போது தான் இறைவன் எமது உள்ளத்தின் உள்ளே புகுந்து தன்னை எமக்குத் தருகிறான்.

பொ.சிவப்பிரகாசம்

### தேசம் காத்திட தேரேறிவருகின்றான்!

தேரேறி வருகின்றான்...
நல்லை முருகன்
தேரேறி வருகின்றான்
மண்ணில் மக்கள் துயர் துடைத்திட
வண்ணத் தேரேறி ...
வலம் வருகின்றான்...
வாழ்வு மலர்ந்திட - நாளும்
நலம் தருகின்றான்...
துன்பங்கள் அகன்று
துயரங்கள் களைந்து ...
எண்ணங்கள் -ஈடேறிட
நல்லை வீதியிலே
தேரேறி.. வருகின்றான்..
நாளெல்லாம் நம் தேசம்
காத்திட.. நல்லூரான்
தேரேறி வருகின்றான்!

க. நாகேஸ்வரா.









# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 02-09-2005

### பக்தர் துயர் நீக்க இன்று தேரேறுவாய்!

*பல்லவி*

தேவர் துயர் நீக்க அன்று தேரேறினாய் - வேலே
பக்தர் வினை நீகக இன்று தேரேறுவாய்

*அனுபல்லவி*

ஆறுமுகம் கொண்டு நீ எட்டுத் திசை நோக்கிடுவாய் - பக்தர்
அனைவரதும் துயர்களைக் களைந்திடுவாய்

*சரணம்*

தேரோடும் வீதியில் நீ ஓடிவருகையில் - உன்
விசை கொண்ட பக்தர்கள் உருண்டோடி வந்திடுவர்
கந்தா! வேலா! என்று வேலே உனை அழைக்க - உன்
கரம் கொண்ட வேலினால் பக்தர்களைக் காத்திடுவாய்

(வேலே-தேவர்)

பக்தி மயமாகிப் பல்காவடிகள் ஆடுதப்பா - உன்
பக்தர்க்குள் நுழைந்து நீ ஆடும் காட்சி அழகப்பா
வெற்றியீட்டிப் பச்சைசாத்தி நீதேரிறங்கி வரும் வேளை - உன்
பக்தர் துயர் விலகுதப்பா பக்தர் மனம் குளிருதப்பா

(வேலே-தேவர்)

- மலர் சின்னையா

ஈசன் மைந்தா! ஏறுமயில் வாகனா!
இடர்போக்கி இன்னருள் தர இரதம்
ஏறி வருக! வருக!

யாழ்ப்பாணத்தில் சேவையிலீடுபட்டிருக்கும்
ஊர்திகளின் வில்லுத்தகடு, றேடியேற்றர், வின்ட்
ஸ்கிரீன் கண்ணாடி மற்றும் வாகன
உதிரிப்பாகங்களை நிதான விலையில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

சதாஸ் மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்

56/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:021 222 2522 Mobile: 0777 759205

சிங்கார வேலவன் சித்திரத் தேரேறி திருவுலா வரும் காட்சிகாண தீவினை எல்லாம் பறந்தோடிவிடும்.

ANNA INDUSTRY அண்ணா
தயாரிப்புக்கள் என்று
கேட்டு வாங்குங்கள்

அண்ணா கோப்பி
அண்ணா பற்பொடி
அண்ணா அரிசிமா
அண்ணா ஜீவாகாரம்
அண்ணா அப்பம் மா
அண்ணா தோசை மா

குமரன் விபூதி,
துர்க்கா பத்தி,
சாயிசுகந்தா,
றோஸ் பத்தி

ANNA COFFEE

ANNA INDUSTRY
அண்ணா தொழிலகம்
இணுவில்.

ஆறுபடை வீடுடைய அலங்காரக் கந்தா
அவனியிலே போர் ஓய்ந்து சமாதானம்
ஏற்பட அருள்புரி முருகா!

கண்ணுக்குக் கண்ணாய் உங்களுக்குக்
கைகொடுக்கக் காத்திருக்கிறது.

துஷா ஒப்ரிசன்ஸ்

544. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

நல்லைக்குமரா! முருகா ! முருகா! தில்லைநாதன் புதல்வா! முருகா! முருகா! வள்ளிதெய்வயானை மணவாளா வருகவருக இரதம் ஏறி நீ

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட...

பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா. முன்பைவிட உறுதியான அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
மூக்குக் கண்ணாடி அகமும், பல்கட்டுமிடமும்

எரிக்கணேஷ்

564. 566. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். தொ.பே.2486.

| கிளைகள்: | |
|---|---|
| இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில். | பழைய பொலீஸ் நிலையம் முன்பாக இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |

கட்டுப்பற்களை சுத்தம்செய்வதற்கான மாத்திரை விற்பனையிலுண்டு.

(C/44663)

கந்தனவன் வடம் பிடிக்க வாரீர்! வாரீர்! அவன் காலடியை நிதம் தொழுவீர்! தொழுவீர்!
கோடை வெயிலா...இல்லைக் குளிர் நிலவா...? அதிசயிக்கவைக்கும் அபாரகூடம்!!

◆ நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகள்... ◆ சர்பத் வகைகள்... ◆ நெல்லிகிரஸ்...

மாத்திரமல்ல சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட உடல் ஆரோக்கியத்திற்குகந்த சிற்றுண்டி வகைகள், கேக், பிஸ்கட் வகைகள்... இன்னும் இன்னோரன்ன சகலவித பலகார வகைகள் வேண்டிய வகையில் உங்கள் வைபவங்களுக்கு ஓடருக்குப் பெற்றுக்கொள்ள விரையுங்கள். உங்களைக் குளிர்ச்சிக் கடலில் மூழ்கடிக்கும்

5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்

131, பிரதான வீதி, யாழ்ப்பாணம். உரிமையாளர்: A.ஜெயக்குமாரன்

ஈசன் மைந்தா ஏறுமயில் வாகனா! இடர்போக்கி இன்னருள்
தர இரதம் ஏறி வருக வருக!

மண்ணில் என்றும் மங்காத புகழ்.
நுண்வினைத்திறன் மிக்க எங்கள் நகைகள்

ஸ்ரீ SRI நகையகம்

392, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம். போன்: 077 670 1343

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 02-09-2005

பார்வதி மைந்தா பாலமுருகா! பார்போற்றும் ஞான வேலா! சுடர் வடிவேலை கையில் ஏந்தி குறைதனைத் தீர்க்க தேரேறி வருக!






# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 02 09 2005

# எந்நாளும் நல்லூரை வணங்கின் இடர்கள் எல்லாம் அகன்றிடும்

இன்று சைவத்தமிழ் மக்களின் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கும் திருநாள். அலங்காரக்கந்தனாக, கலியுகவரதனாக, சைவத் தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் நல்லைக் கந்தன் பக்தர்களுக்கு அருள்சுரக்க சித்திரத்தேரில் வருகிறார்.

முப்புரம் எரித்த திருவிளையாடலுடன் தேரானது தொடர்புபட்டது. முப்புரத்து அரக்கர்களை அழிக்க சிவபெருமான் தேரேறிச்சென்றார் என்று புராணங்கள் கூறும். முப்புரம் என்பது ஆன்மாவை வருத்துகின்ற ஆணவம், கன்மம், மாயை என்பவற்றைக்குறிக்கும் என்பதே திருமூல நாயனாரின் விளக்கமாகும்.

வேல் தான் ஞானம். எல்லாவற்றையும் ஞானம்தான் வெல்லும். ஞனவேலால் முருகப்பெருமான் முதலில் மாயா மலமாயிருந்த தாரகனை வென்றார். ஞானவேலால் கன்ம மலமாயிருந்த சிங்கமுகாசுரனை வென்றார்.

ஆணவ மலம்தான் கடைசிவரை இருக்கும். சட்டென்று வெல்ல முடியாது. 'நான்' என்ற ஆணவமலம் அகலும்வரை இறைவனை அடையமுடியாது. ஆணவத்தை அடக்கவேண்டும் என்றால் இறைவனிடம் தஞ்சம் புகுவதே சிறந்த வழியெனத் திருமுறைகள் கூறுகின்றன. ஆணவத்தின் முழுவடிவமான சூரபத்மன் பல வடிவங்கள் எடுத்தான். இறுதியில் சூரன், முருகப்பெருமானிடம் தோற்றுப் போனான். எம்மைப்பிடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை அழித்து எமது உள்ளத்து அழுக்குகளை அகற்றி உள்ளம் தூய்மையும் அழகும் பெற்று, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதையும், கார் மயில்வாகனனைச் சாந்துணைப்போதும் மறவாதவர்களுக்கு தாழ்வில்லையே என்பதை மெய்ப்பித்துக்காட்டவும் - துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் என்பதற்கேற்பவும் ஆறுமுகச் செவ் வேள் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராகப் பக்தர்களுக்கு அருள்மழை பொழிய தேரேறி வருகிறார்.

'எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே' என்றும் நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனதோடு நாம் கந்தனை வணங்கினால் எங்கள் சிந்தை தெளியும் என்று ஞானிகள் எங்களுக்கு நல்வழி காட்டியுள்ளார்கள்.

ஆறுமுகப் பெருமானிடம் உள்ளக்கமலத்தை ஒப்படைக்கவேண் டும். நல்ல உள்ளத்திற்கு குறியீடாக அமைவது மலர். அதனிடத்தில் புதுமையும் அழகும் மணமும் இருந்து கொண்டிருக்கும் அத்தகைய உள்ளத்தை முருகப் பெருமானிடத்தில் ஒப்படைப்பதற்கு அறிகுறியாக தேரஏறிவரும் ஆறுமுகப்பெருமானுக்கு பக்தர்கள் தங்கள் அழகிய கைகளால் மலர் தூவி வழிபடுவார்கள்.

தேரின் கோபுரம் குவிந்துசென்று தேர்க்கலச முடிவில் வெள்ளிக் குடை தெரிகிறது. எமது மனம் ஒருமைப்பட்டு, ஒருமித்த சிந்தனையுடன் அழகுத் தெய்வம் முருகப்பெருமானின் பாதக் கமலங்களைப் பணிந்தால் எங்கள் வாழ்வு பசுமையடையும். விழிக்குத்துணை வேற் பெருமானின் பாதக் கமலங்களேயாம். தேரின் பீடம் இதயத்தைக்குறிக்கும். ஆறுமுகப் பெருமான் தேரின் பீடத்தில் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. எமது வாழ்கைத்தேர் சிறப்பாக ஓட எங்கள் இதய கமலத்தில் முருகப்பெருமானை எழுந்தருளச் செய்யவேண்டும். முருகப்பெருமானின் சக்திகளாகிய வள்ளி, தெய்வயானை கரங்களில் முறையே விளங்கும் தாமரை, நீலோற்பலமலர்கள் என்றும் மலர்ந்திருக்கும். வள்ளி, தெய்வயானை சமேதராக தேரேறி வரும் முருகப்பெருமானை உள்ளன்போடு வழிபட்டால் எங்கள் வாழ்வு எப்பொழுதும் மலர்ந்த வாழ்வாக இருக்கும்.

ஆறுமுருகப்பெருமானிடத்து கொண்டுள்ள பேரன்பு அஃது ஆனந்த வடிவெடுத்து வெளிப்படும். அதன் புறச்சின்னம் பக்தர்களின் உடலில் தெரியும். சித்திரத்தேரேறி வரும் வள்ளி - தெய்வயானை சமேத ஆறுமுகப் பெருமானைப் பக்தர்கள் உடல் புளகிப்ப வழிபடுவார்கள்.

*"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து*
*உன்விரை யார்கழற்கென்*
*கைதான் தலை வைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்".*

எனப் பக்தர்கள் முருகப்பெருமான் மீது உண்டான பேரன்பினால் உள்ளம் உருகி வழிபடுவார்கள். இன்பக்கண்ணீர் அருட் தாகத்தால் வருவது அஃது இறை நாட்டத்தால் வருவது. ஆறுமுகப்பெருமான் சக்தி இருவருடன் ஆறுமுகப் பொருளை உணர்த்த தேரேறி வரும்போது ஏற்படும் உணர்ச்சியின் வேகத்தில் கண்கள் என்னும் தொடுமணற்கேணியில் சுரந்து நீர்பாயும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும். தேரேறி வரும் முருகப்பெருமானின் நாட்டம் தெவிட்டிப் போகாத பேரானந்தத்தையும், பேரன்பையும் உண்டு பண்ணுகிறது. அத்தகைய தெவிட்டாத நிலை ஆனந்த நிலையாகும். முருகனடியார்கள் ஆராத முத்தியினது ஆவேச ஆசைக் கடற்குள் மூழ்குவார்கள். அங்கையொடு மலர்தூவி, அங்கமது புளகிப்ப, அன்பினால் உருகி, விழிநீர் ஆறாக, ஆராத ஆவேச ஆசைக்கடற்குள் மூழ்கி, கந்தா! குமரா! முருகா! சரவணபவ! என்று அன்புருகி வழிபட்டு இந்த நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவிட, எமது அசுர குணம் போக்கி, சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு பெறுவோமாக.

-நந்தன்.
















# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

V ஆம் பக்கத் தொடர்ச்சி.....

அக்கினி என்ற மூன்றுக்குள்ளும் உள்ள இருளைப்போக்கும் மூன்று சுடர். அந்த மூன்று சுடர்களுக்கும் ஒளி தந்து இருளைப் போக்க உதவும் முகம் ஒன்று. இன்னும் சொல்லப் போனால் உயிரின் அறிவு, இச்சை, செயல்களை ஆணவ மலம் மறைக்கின்றது. புற இருள் பொருள்களை மறைத்துத் தன்னைக் காட்டிநிற்கும் ஆயின் ஆணவ மல இருள் பொருளை மறைத்துத் தன்னையும் காட்டாது நிற்றலின் அவ்விருளினும் கொடிய இருள் என்பார் மா இருள் என்றார். ஆணவ மல மறைப்பினால் தன்னையும் உணராது மயங்கிக்கிடந்த உயிர் அம்மல மறைப்பு நீங்கித் தூய நிலை எய்துதல் மறு இன்றி விளங்குதல் ஆகும். இச் செயலை முருகப்பெருமானின் ஒரு திருமுகத்தின் செயலாக வைத்துப் பாடுகிறார் நக்கீரர்.

### அருளும் முகம் (ஒரு முகம்)

*"ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்*
*காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே"*

ஆர்வலர் அன்புடையோர், பக்தர்கள் அவர்கள் தன்னை வாழ்த்துங்கால் அவர்க்கு இனியவராக ஒழுகி அவர்கள் பால் வைத்த காதலாகவே மகிழ்ந்து வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுக்கும் ஒருமுகம். அடியார் தமக்கு வேண்டுவன இவை இவை எனக் கேளாது விடத்தும் அவர்க்கு வேண்டுவன இவை எனத் தானே அறிந்து ஈந்தருளும் பேரருளாளன் முருகப்பெருமான்.

### வேள்வி காக்கும் முகம் (ஒரு முகம்)

*"மந்திர விதியின் மரபுளி வழாஅ*
*அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே"*

மறைவழி நின்று வேள்விகளைச் செய்கின்றார்கள் அந்தணர்கள். அச்சான்றோர்களுடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி காப்பது ஒரு திருமுகம். வேள்விக்கு ஆக்கம் தேடுவது அந்தத் திருமுகம். இவர்கள் செய்யும் கர்ம வேள்வி, தவவேள்வி, செப வேள்வி, தியான வேள்வி, ஞான வேள்வி என ஐவகைப்படும். இவ்வேள்விகளுக்கு இடையூறுகள் உண்டாகாதபடி முருகனே இன்னின்று பாதுகாத்தருள்வான்.

### மெய்ஞானத் திருமுகம் (ஒரு முகம்)

*"எஞ்சிய பொருள்களை ஏம உற நாடித்*
*திங்கள் போலத் திசை விளக்கும்மே"*

அறிவே உருவமாக இருப்பவன் முருகன். அவன் ஞான பண்டித சாமி. அவன் மெய்யடியார்களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப் போக்கி தெளிவிப்பான். அப்படித் தெளிவிக்கும் செயலைச் செய்கின்றது ஒரு திருமுகம். சிறப்பாகச் சொன்னால் அத்திருமுகம் நூல்களால் காட்ட இயலாது எஞ்சிய பொருள்களைத் தன் அன்பர்கள் காவல் உறும்படி ஆராய்ந்து உணர்த்தித் திங்கள் போலத் திசை விளக்கும். 'காட்டாதன எல்லாம் காட்டி சிவம் காட்டி தாட்டாமரை காட்டி தன் கருணைத் தேன் காட்டி' ஆட்கொள்வான் முருகப் பெருமான்.

### வீரத்திருமுகம் (ஒரு முகம்)

*"செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்*
*கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே"*

நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குவான் முருகப் பெருமான். அசுரர்கள் தேவர்களுக்கு அன்று பெருந் துன்பம் விளைவித்தார்கள் தேவர்களுக்கு அன்று பெருந் துன்பம் விளைவித்தார்கள். அசுரர்கள் நம்மிடையே இன்றும் வாழ்ந்துகொண்டு நல்லவர்களுக்குத் துன்பத்தைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை அடியோடு அழிக்கும் திறன் முருகப் பெருமானுக்கே உண்டு இந்த வீரச் செயலை ஒரு திருமுகம் செய்கின்றது.

### இன்பத் திருமுகம்

*"குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்*
*மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே"*

ஆறாவது திருமுகம் இன்பத்தை வழங்குகின்றது. அத்திருமுகம் குறவருடைய சிறுமியாகிய வள்ளியெம் பிராட்டியோடு மகிழ்தலைப் பொருந்தியிருந்தது என்பது பாடலின் பொருள். வள்ளி ஆன்மாக்களுடைய பிரதிநிதி முருகப் பெருமானின் இச்சாசக்தி. கர்ம நுகர்ச்சி இல்லாத கடவுள் இவ்வாறு மகிழ்தலைப் பொருந்துதல் உலகில் அன்பு செறிந்த இல்வாழ்க்கையில் உயிர்கள் அமர்ந்து இன்பம் பெறும் பொருட்டேயாகும்.

### ஆறுமுகமான பொருள்

நாம் காண்கின்ற ஆறு திருமுகங்களையும் இவ்வாறு நக்கீரர் அழகாக வரிசைப்படுத்தி இருக்கிறார். இவற்றை இன்னொரு பாணியில் 'ஏறுமயில் ஏறிவிளையாடு முகம்' என்ற திருப் புகழிலே அருணகிரியார் பாடுவார்.

இத்தகு ஆறுமுகங்களோடு தத்துவப் பொருளை விளங்கும் நல்லூர்க்கந்தன் இன்று அழகிய சித்திரத்தேரில் இலட்சோப லட்சம் மக்கள் மத்தியில் பவனி வருகின்ற திருக்காட்சியைப் பார்க்கின்றோம். எந்த மயமும் கந்த மயமாகக் காட்சியளிக்கின்றது. நல்லூர் பூலோக கைலாசமாக எமக்கெல்லாம் தெரிகின்றது. இந்திர விழாவாக நல்லைத் தேர்த்திருவிழா சிறப்புப் பெறுகின்றது.

எல்லாம்வல்ல நல்லைக்கந்தன் நாட்டில் நல்லதொரு தீர்வொன்றை தந்தருளி தேசத்து மக்களின் வாழ்வுக்கு காவலனாக துணையிருக்க வேண்டுமென இந்த நாளில் அனைவரும் பிரார்த்திப்போமாக.

மதுரகவி காரை.
எம். பி. அருளானந்தன்.







